வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 07.03.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 88 | பக்கங்கள் : 16




## ஐ.நா. தீர்மானத்தை ஏற்கப்போவதில்லை

### மீண்டும் அறிவித்தது இலங்கை

ஜெனிவா, மார்ச் 07

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கடந்த ஆண்டு ஒக்ரோபரில் நிறைவேற்றிய 51/1 தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று இலங்கை மீண்டும் தெரிவித்துள்ளது. ஆனால், கலந்துரையாடலுக்காக இலங்கையின் கதவுகள் திறந்தே இருக்கும் என்று கூறியுள்ளது.

15



## எரிபொருட்களின் விலை குறையலாம்

### மத்திய வங்கி ஆளுநர்

கொழும்பு, மார்ச் 07

எதிர்வரும் வாரங்களில் உள்ளூர் சந்தையில் எரிபொருட்களின் விலைகள் குறையலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன. டொலருக்கு எதிராக ரூபாயின் பெறுமதி அதிகரித்துள்ளதால் பெற்றோலிய உற்பத்தி பொருட்களின் விலைகள் குறைவடையலாம் என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

ரூபாயின் பெறுமதி வேகமாக அதிகரித்தால் பணவீக்கம் வேகமாக வீழ்ச்சியடையும்.

15

## தயாசிறியின் பதவி பறிப்பு

கொழும்பு, மார்ச் 07

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து தயாசிறி ஜயசேகரவை அந்தக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன நீக்கியுள்ளார்.

இதனிடையே, தயாசிறி ஜயசேகர வெளிநாடு சென்றுள்ளார். இந்த நிலையில், சுதந்திர கட்சியின் பதில் பொதுச் செயலாளராக மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க நியமிக்

15

## தேர்தலை ஒரு வருடத்துக்கு பிற்போட ஜனாதிபதி சதி!

### எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 07

எல்லை நிர்ணய குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அதன் மூலம் சூழ்ச்சி செய்து மீண்டும் ஒரு வருடத்துக்கு தேர்தலை காலம் தாழ்த்துவதே ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் அடுத்த திட்டமாகும். எனவே, தேர்தல் ஆணைக்குழு அதற்கு இடமளிக்காமல் தேர்தலுக்கான தினத்தை அறிவிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

நாம் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுடன்

15

## தமிழ் புத்தாண்டுக்கு முன் தேர்தல் சாத்தியமில்லை!

### தேர்தல் ஆணைக்குழு தலைவர்

கொழும்பு, மார்ச் 07

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதி திறைசேரியின் கைகளிலேயே உள்ளது. தேர்தல் ஆணைக்குழு ஏப்ரல் நடுப்பகுதியில் - தமிழ் - சிங்கள புத்தாண் டுக்கு முன்னதாக தேரதலை நடத்துவதற்கான சாத்தியப்பாடுகளை நிராகரிப்பதாக தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா இதனை தெரிவித்தார்.

உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் திறைசேரி

15

## தொழில்சங்க நடவடிக்கை இறுதித் தீர்மானம் இன்று!

கொழும்பு, மார்ச் 07

அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கைக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பில் இன்று செவ்வாய்க்கிழமை இறுதி முடிவு எடுக்கப்படும் என்று தொழில்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், துறைமுகங்கள், மின்சாரம், நீர் வழங்கல், வங்கிகள், பெற்றோலியம் மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்கள் உட்பட 40 தொழில்சங்கங்கள் இந்தக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

அரசாங்கத்தின் அநீதியான

15

## பலமான அரசுக்காக தேர்தல் நடக்கும்

கொழும்பு, மார்ச் 07

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை பெற்றுக்கொண்டு நாட்டை ஆட்சி செய்யவே ரணில் விக்ரமசிங்க விருப்புகிறார். அதனால் தனி அதிகாரத்தை பெற்றுக்கொள்ள விரைவாக தேர்தலுக்கு செல்வார். ஆனால், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையில் அதனை செய்ய முடியாமல் இருக்கிறது. அதற்கு குறிப்பிட்டதொரு கால அவகாசம் வழங்கவேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் அந்தக் கட்சியின் மகளிர் அணித் தலைவி சாந்தி கோன் ஹகே நேற்று இந்தத் தகவலை தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப தேவையான நடவடிக்கைகளையே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கொண்டு

15

## வடக்கு காற்றாலை திட்டத்துக்காக அதானியை காட்டியது இந்திய அரசே

### கவலையில்லை என்கிறார் அலி சப்ரி

புதுடில்லி, மார்ச் 07

வடக்கு மாகாணத்தில் காற்றாலை திட்டம் உள்ளிட்ட உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு அதானி குழுமத்தை அடையாளம் காட்டியது இந்திய அரசாங்கம்தான். அதானியின் திட்டங்களை அரசாங்கத்துக்கான ஒப்பந்தமாகவே பார்கிறோம் என்று கூறியிருக்கிறார் வெளி



விவகார அமைச்சர் அலி சப்ரி.

இந்தியாவின் பிரபல ஆங்கில நாளிதழான ‘தி இந்து’வுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் துறைமுகம், விமான நிலையம் மற்றும் மின் உற்பத்தி திட்டங்களில் அதானி நிறுவனம் ஈடுபட்டுள்ளது. அதானி நிறுவனங்களின் பங்குகள் வீழ்ச்சி அடைந்ததால் இலங்கை

15

## 40 வீதத்தால் மின்சார சபை ஊழியர்கள் குறைக்கப்படுவர்!

### இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 07

மின்சார சபை ஊழியர்கள் எண்ணிக்கையை 40 சதவீதத்தால் குறைக்க அவதானம் செலுத்தப்பட் டுள்ளது. மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பான நிபுணத்துவ அறிக்கையை எதிர்வரும் ஏப்ரல் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க மின்சாரத் துறை மற்றும் வலுசக்தி துறை அமைச்சு தீர்மானித்துள்ளது என மின்சாரத்துறை இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக தெரிவித்தார்.

மின்சாரத்துறை மறுசீரமைப்பு தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

15

## பிக்குகளின் அரசியல் தலையீட்டாலேயே இனப்பிரச்னை இன்னும் தீர்க்கப்படவில்லை!

### விக்னேஸ்வரன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 07

இலங்கையில் நிலவும் இனப்பிரச்னை இன்னமும் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு அரசியல் விவகாரங்களில் பௌத்த தேரர்களால் மேற்கொள்ளப்படும் தலையீடுகளே காரணம் என்பதே எனது நிலைப்பாடாகும். வட, கிழக்கு வாழ் தமிழ் மக்களின் பிரச்னைகள் என்னவென்பதைக் கண்டறிவதற்கு ஆங்கிலம் அல்லது தமிழ்மொழி பேசக்கூடிய பௌத்த தேரர்கள் தமிழ் தலைவர்களுடன் கலந்துரையாடுவது இன்றியமையாததாகும் என்று தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தக் கூடாது என வலியுறுத்தி மல்வத்து, அஸ்கிரிய, அமரபுர மற்றும் ராமாஞ்ஞ பீடங்களின் மகாநாயக்க

15

## இலங்கை தொடர்பான மீளாய்வுகூட்டம் நாளை

கொழும்பு, மார்ச் 07

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக 6ஆவது கால முறை மீளாய்வு கூட்டம் நாளை புதன்கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளது.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் இந்த மீளாய்வுக்கூட்டம் தற்போது ஜெனிவாவில் நடக்கிறது. இந்த நிலையிலேயே இலங்கை தொடர்பான கலந்துரையாடல் நாளை ஆரம்பமாகவுள்ளது.

ஐ. நா. நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி அருணதிலக இந்தக் கூட்டத்தில் இலங்கை தரப்புக்கு தலைமை தாங்குவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

எனக்குத் தெரிந்த கனடாவில் வாழும் பெரியவர் ஒருவர் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒருதடவை யாழ்ப்பாணம் வருவார்.

இலங்கையில் வாழும்போது வைத்தியசாலை மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளராக பணியாற்றியவர். முதலில் ஜேர்மனிக்கு புலம்பெயர்ந்த அவர் அங்குள்ள வைத்தியசாலை ஒன்றில் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றிருந்தார்.

அவர் பணியாற்றிய அந்த வைத்தியசாலையில் பணிபுரிந்த பேராசிரியர் ஒருவர், நாய்க்கடிக்கு விசேட மருந்து ஒன்றை கண்டுபிடிக்க அவருக்கு முழுக்க முழுக்க உதவியாக இருந்தவர் நம்மவரான இவர்தான். ஏற்கனவே பாவனையில் இருந்த இரண்டு வேறு வேறு மருந்துகளை பயன்படுத்தி இந்த புதிய மருந்தை கண்டுபிடித்தனர். இதனால் மிகுந்த செல்வாக்குடன் ஜேர்மனியில் இருந்த அவர், குடும்பத்துடன் கனடா குடிபெயர்ந்த பின்னரும் அதே போன்ற ஓர் ஆய்வுகூடத்தில் பணிக்கு சேர்ந்தார். எழுபது வயதைக் கடந்த பின்னரும் அவருக்கு ஓய்வுகொடுத்து வீட்டுக்கு அனுப்ப அந்த ஆய்வுகூடம் விரும்பாததால் தொடர்ந்து பணியாற்றி வருகின்றார்.

இது அவர் பற்றிய அறிமுகம் என்றாலும், அவர் அவ்வப்போது யாழ்ப்பாணம் வருவது தீவுப்பகுதியில் உள்ள தனது கிராமத்தை நேரில் பார்ப்பதற்காக.

அந்தக் கிராமத்தில் ஒரு பகுதி, சுமார் அறுபது வீடுகள் யாரும் குடியிருக்ககாத பிரதேசமாக மாறிவிட்டது. அந்த அறுபது குடும்பமும் இப்போது கனடாவில் வாழ்கின்றமையே அதற்கு காரணம். சுமார் இரண்டு கிலோ மீற்றர் வீதியில் இரு பக்கமும் வீடுகள் வெறும் சீமெந்து திட்டிகள் போல காட்சி தருகின்றன. வீட்டிலிருந்து கழட்டி எடுக்கக்கூடிய பொருட்கள் எல்லாவற்றையும் அயல் கிராமத்தவர்கள் கழட்டி எடுத்துக்கொண்டு போய்விட்டனர். அந்த வீதி பற்றைகள் வளர்ந்து நடந்து செல்லக்கூட முடியாத அளவுக்கு மாறிப்போயிருக்கும். அவர் வந்ததும் 'பெக்கோ' வாகனம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி, அந்த வீதியை மட்டும் செப்பனிட்டு வாகனங்கள் போகக்கூடியவாறு துப்பரவு செய்துவிட்டு போய்விடுவார்.

மீண்டும் இரண்டு அல்லது மூன்று வருடங்களின் பின்னர் அவர் வரும்போது அந்த வீதி மீண்டும் பழைய நிலையில் இருக்கும். இவர் மீண்டும் செப்பனிட்டு செல்வார்.

ஒவ்வொரு தடவையும் அவர் சில இலட்சங்களை செலவு செய்துவிட்டு சென்றுவிடுவார். பாவம் மனுசன் தனது கிராமம் இப்படி போய்விட்டதே என்ற கவலை அவருடன் பேசுகின்றபோதில் எல்லாம் உணரமுடியும்.

இந்தக் கதையை இப்போது எதற்காக எழுதுகின்றேன் என்று நீங்கள் நினைக்கலாம். இதுபோன்ற பல காணிகள் மக்கள் தாமும் பாவிக்காமல், மற்றவர்களுக்கும் கொடுக்காமல் வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அது பற்றி வேறு ஒருநாள் இந்தப் பத்தியில் பேசுவோம்.

சில வாரங்களுக்கு முன்னதாக கொழும்பு தமிழ்ச் சங்கம் பற்றி இந்தப் பத்தியில் எழுதியிருந்தேன்.

ஓர் அரசியல் கலப்பற்ற புனிதமான ஒரு தமிழ் சங்கத்துக்கு அரசியல்வாதி ஒருவர் தலைவராக இருப்பது பற்றி எழுதியிருந்தேன்.

அந்த சங்கத்தில் நடக்கும் வேறு பல விடயங்களை ஒருவர் விலாவாரியாக விபரித்து கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். அதில் ஒன்று இப்படி காணி சம்பந்தமானது.

கொழும்பு தமிழ் சங்கத்துக்கு பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் தலைவராக இருந்த காலத்தில் சங்கத்திற்கென மாங்குளத்தில் சுமார் முப்பது ஏக்கர் காணி வாங்கப்பட்டிருந்ததாம்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் அரசியலுக்கு வருவதற்கு முன்னதாக தேசிய மொழிகள் திணைக்களத்தில் உயர்பதவியில் இருந்தவர். அப்போது அவர் தமிழ் சங்கத்திற்கும் 1957- 1959 ஆண்டுகள் தலைவராக இருந்தார். அவர் காலத்தில் அறுபதாயிரம் ரூபாய்க்கு கொள்வனவு செய்யப்பட்ட அந்த மாங்குளம் காணி மேலே சொன்ன தீவக கிராமம் போல பற்றை படர்ந்த காடாகத்தான் இருந்து கொண்டிருக்கின்றது. சில ஆண்டுகளுக்கு முன்னரும் அதனை சுமார் நான்கு இலட்சம் ரூபாய் செலவு செய்து, காணி துப்பரவு செய்யப்பட்டு எல்லைக்கல்லுகள் வைக்கப்பட்டனவாம். இப்போது அது மீண்டும் பற்றைகள் வளர்ந்த காடாக மாறிப்போயிருக்கின்றது.

அதனைவிட முக்கியமானது, இவர்கள் தங்களுடையது என்று குறிப்பிடும் அந்தக் காணி, அரச காணி என்று பிரதேச சபை கையைவிரித்து விட்டது. தமிழ் சங்கத்திடம் வாங்கப்பட்ட காணிக்கு உறுதி இருந்தும் காணி இல்லை என்ற நிலை.

அதனை மீண்டும் பல லட்சம் செலவில் எல்லை வேலியிட்டு பாதுகாக்கவேண்டும் என்றும் இப்படி செய்தால்தான் அது சங்கத்தினுடையது என்று சட்டரீதியாக வாதிடமுடியும் என்றும் சட்டம் தெரிந்த மன்றத்தின் தலைவரும் அவரின் சகா ஒருவரும் விடாப்பிடியாக இருக்கின்றனராம்.

கனடாவிலிருந்து தாயகம் வந்துசெல்லும் அந்தப் பெரியவர் தனக்கு திருப்தி ஏற்பட வேண்டும் என்பதற்காக அவ்வாறு இடையிடையே வந்து வீதியை செப்பனிட்டு செல்கிறார். ஆனால், அதற்காக கொழும்பு தமிழ் சங்கத்துக்கு பல்வேறு தேவைகள் இருக்கும்போது அதன் பணத்தை இப்படி செலவு செய்யவேண்டுமா? என்று சங்கத்திலுள்ளவர்கள் முணுமுணுப்பதும் நியாயமானதுதானோ?

- ஊர்க்குருவி




யாழ்ப்பாணம் நகரின் கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது... (படங்கள் - ஐ. சிவசாந்தன்)

# நிதி விடுவிப்பு தொடர்பில் பிரேரணை கட்சி தலைவர்கள் கூட்டத்தில் ஆராய்வு

## வீரசுமண எம். பி.

கொழும்பு, மார்ச் 07

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நிதி விடுவிப்பு தொடர்பான பிரேரணை தொடர்பில் அடுத்த வாரம் கட்சி தலைவர் கூட்டத்தில் கலந்துரையாட தீர்மானித்துள்ளோம். இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டால் திறைசேரி நிச்சயம் தேர்தல் நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்க வேண்டும் என இலங்கை கம்யூனிச கட்சியின் பதில் தலைவரும் எம். பியுமான வீரசுமண தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும்,

எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் ஓர் உறுதியான தீர்மானத்தை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிக்க வேண்டும். தேர்தலை பிற்போடும் ஜனாதிபதியின் முயற்சிக்கு உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ளமை வரவேற்கத்தக்கது.

சர்வஜன வாக்குரிமை தொடர்பில் எதிர்வரும் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் சபை ஒத்திவைப்பு விவாதம் இடம்பெறவுள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் நாட்டு மக்கள் விசேட கவனம் செலுத்தியுள்ளார்கள்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஒதுக்கப்பட்டுள்ள நிதியை விடுவிக்காமல் இருக்கும் திறைசேரியின் செயல்பாடுகளுக்கு உயர்நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

தேர்தல் நடவடிக்கைகளுக்கு நீதிமன்றத்தால் எவ்வித தடையும் ஏற்படுத்தப்படவில்லை. தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் நீதித்துறை உள்ளது என்பதை தெளிவாக விளங்குகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நிதி விடுவிப்பு தொடர்பில் பாராளுமன்றத்துக்கு ஒரு பிரேரணையை கொண்டுவருவது தொடர்பில் எதிர்வரும் வாரம் இடம்பெறும் கட்சித் தலைவர் கூட்டத்தில் கலந்துரையாட தீர்மானித்துள்ளோம். இந்த நிதி விடுவிப்பு பிரேரணை நிறைவேற்றப்பட்டால் திறைச்சேரியால் நிதி விடுவிக்காமல் இருக்க முடியாது.

பாராளுமன்றத்துக்குகொண்டு வரும் நிதி விடுவிப்பு தொடர்பான பிரேணைக்கு யார் ஆதரவாக செயல்படுகிறார்கள், யார் எதிராக செயல்படுகிறார்கள் என்பதை நாட்டு மக்கள் அறிந்து கொள்வார்கள். தேர்தலை தடுக்கும் முயற்சிகள் அனைத்துக்கும் எதிராக நிச்சயம் போராடுவோம் - என்றார். (ஐ)

# மாமனிதர் சிவநேசனின் 15ஆவது நினைவேந்தல்!



வடமராட்சி, மார்ச். 07

மாமனிதர் கிட்டினன் சிவநேசனின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று திங்கட்கிழமை கரவெட்டி தெற்கு - மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதில், ஈகைச்சுடரை மாமனிதர் கிட்ணன் சிவநேசனின் புதல்வி தாட்சாயினி சிவநேசன் ஏற்றினார். தொடர்ந்து அவரது உருவப் படத்துக்கு மாமனிதரின் புதல்விகள் மலர்மாலை அணிவித்தனர். தொடர்ந்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம் பெற்ற குறித்த நினைவேந்தலில் நினைவுரைகள் நடைபெற்றன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது சிவநேசன் 2008ஆம் ஆண்டு இதேநாளில், மாங்குளம் - குஞ்சுக்குளம் பகுதியில் இராணுவத்தின் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ-2)

# பகவத் கீதை சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 07

பகவத்கீதை அத்தியாயம் 5 வாழ்வின் பூரணத்துவத்துக்கான மூன்று படிநிலைகள் எனும் தலைப்பில் ஆங்கில சொற்பொழிவை சுனந்தாஜி வழங்கவுள்ளார்.

எதிர்வரும் 23 - 26ஆம் திகதி வரை மாலை 6.45 மணி முதல் இணையவழியில் நடைபெறும் இந்த சொற்பொழிவில் பங்கேற்க விரும்புவோர் vedantacolombo.org என்ற மின்னஞ்சல் மூலம் இலவசமாக பதிவு செய்து கொள்ள முடியும்.

இதேசமயம், சுவாமி பார்த்த சாரதியின் சிஷ்யை உமையாள் வேணுகோபால் பகவத்கீதை அத்தியாயம் 6 பிரதி ஞாயிறுதோறும் மாலை 4.45 மணி முதல் நடத்துவார்.

மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் vedantacolombo.org என்ற மின்னஞ்சலுடன் அல்லது 077 590 7500 என்ற கைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஈழநாடு
Eelanadu
07.03.2023 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், மாசி 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஈழ - தமிழ்நாடு மீனவர் பிரச்னை?

தமிழ்நாடு மீனவர்கள் இலங்கை கடல் பரப்பில் மீன்பிடிப்பதற்கு அனுமதியளிப்பது தொடர்பான பிரச்னையில் வடக்கு மாகாண தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஓரணியாகத் தங்களின் எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றனர். இதனை டக்ளஸ் தேவானந்தா வரவேற்றிருக்கின்றார்.

மீனவர்கள் வடபுல கடல் எல்லைக்குள் வருவது ஒரு நீண்டகால பிரச்னை. இந்தப் பிரச்னையின்போது, 'இந்திய மீனவர்கள்' - என்றே அடையாளப்படுத்தப்படுவதுண்டு. இந்தியாவின் ஒரு மாநிலத்தை சேர்ந்தவர்களுடனான பிரச்னையென்று நோக்கினால், இந்திய மீனவர்களென்று அழைப்பது சரியானதுதான். ஆனால், அரசியல் பிரயோகத்தில் இது தவறானது. இந்திய மீனவர்களென்று அவர்களை அழைப்பதற்கு பதிலாக, தமிழ்நாட்டு மீனவர்களென்று அழைப்பதே சரியானது. ஏனெனில், அரசியல் விடயங்களில் இந்தியாவுடனான உறவும், தமிழ்நாட்டுடனான உறவும் ஒரே மாதிரியாக நோக்கப் படுவதில்லை. தமிழ்நாடு எப்போதும் தனியாகவே நோக்கப்படுகின்றது. தமிழ்நாட்டுடனான அரசியல் உறவுகள் தனித்துவமானவையாகவே நோக்கப்படுவதுண்டு.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இது இந்திய மீனவர்களுடனான பிரச்னையல்ல - மாறாக, தமிழ்நாட்டு மீனவர்களுடனான பிரச்னை யாகும். ஏனெனில், வடபுல கடல் எல்லைக்குள் நுழைந்து மீன்பிடி யில் ஈடுபடுவோர் வடஇந்திய மீனவர்கள் அல்லர். இலங்கை கடற் படையின் - அரசாங்கத்தின் பார்வையில் இந்திய மீனவர்களென்று அடையாளப்படுத்தினால் அதில் தவறில்லை. ஆனால், ஈழத் தமிழ் அரசியல்வாதிகள் இதனை இந்திய மீனவர்களின் பிரச்னையாக பார்க்க முடியாது. மாறாக தமிழ்நாடு மீனவர்களுடனான பிரச்னையா கவே நோக்க வேண்டும். இந்த நீண்டகால பிரச்னையை எவ்வாறு தான் தீர்ப்பது?

இலங்கை - இந்திய அரசாங்கங்களால் இந்தப் பிரச்னைக்கு முற்று புள்ளியிட முடியவில்லை. வடக்கு மீனவர்கள் பாதிக்கப்படும்போது, வடபுல மீனவர்களும் ஈழத் தமிழ் அரசியல்வாதிகளும் கண்ட னங்களை வெளியிடுகின்றனர். இதேபோன்று, தமிழ்நாட்டு மீன வர்கள் பாதிக்கப்படும்போது, தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் அதனை கண்டித்து மத்திய அரசிடம் முறையிடுகின்றனர். இதுதான் கடந்த பல வருடங்களாக இடம்பெற்று வருகின்றது. இந்தப் பிரச்னைக்காக, சுமந்திரன் தலைமையிலான குழுவினர் ஒருமுறை கடலுக்குள் இறங்கியும் எதிர்ப்புகளை வெளியிட்டிருந்தனர். ஆனது எதுவுமில்லை. வடபுல மீனவர் அமைப்புகளைப் பொறுத்தவரையில் முன்னர் கட லட்டை விடயத்தில் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிராக ஆர்ப்பாட் டங்களில் ஈடுபட்டனர். இப்போது தமிழ்நாட்டு மீனவர்களால் வருகின்ற பிரச்னையின் பக்கம் திரும்பியிருக்கின்றனர். கடலட்டை பண்ணை களின் பிரச்னை முடிந்துவிட்டதா?

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அனைத்தையும் தமிழர்களிடம் விட்டுவிட்டு அது வெறும் பார்வையாளராக இருப்பதா கவே தெரிகின்றது. பாதிக்கப்படுவதாக கூறப்படும் மீனவர்களும் தமிழர்கள் - பாதிப்பை ஏற்படுத்துவதாகக் கூறப்படும் மீனவர்களும் தமிழர்கள் இதனை கையாள வேண்டிய அதிகாரத்திலிருக்கும் டக்ளஸ் தேவானந்தாவும் தமிழர். இந்த பிரச்னை எங்கிருந்து - எப்படி ஆராய்வது? எவ்வாறு தீர்ப்பது? அதற்கான பொறிமுறை என்ன? அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்னையை கையாளு வதற்கு தமிழ்நாட்டு மீனவர்களுக்கு அனுமதியளிக்க முற்படுகின்றது.

இதன் மூலம் தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்வதையும், அதனால் வருகின்ற இரு நாட்டு அரசியல் பதற் றங்களையும் தவிர்க்கலாமென்று அரசாங்கம் கருதுவதுபோல் தெரிகின்றது. இலங்கை - இந்திய - தமிழ்நாடு அத்துடன் வடபுல மீன வர்கள் மற்றும் அரசியல் தலைமைகளென்று அனைவரும் ஒரு புள்ளியில் சந்தித்தால் மட்டுமே, இந்தப் பிரச்னைக்கான தீர்வை காணலாம். ஆனால், இது இலகுவான விடயமா?

# மந்திரிமனைக்குள் நுழைய வேண்டாம் என்று அறிவிப்பு


படம் : ஐ. சிவசாந்தன்

*யாழ்ப்பாணம், மார்ச் 07*

யாழ்ப்பாணத்தின் தொல்லியல் அடையாளங்களில் ஒன்றான மந்திரிமனை பாது காப்பற்றதாக இருப்பதால் உள்ளே செல்ல வேண்டாம் என்று தொல்லியல் திணைக் களம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண இராச்சிய காலத்தில் அரசனின் அமைச் சரின் வாசஸ்தலமாக இது பயன்படுத்தப்பட்டது என்று கருதப்படுகின்றது. ஆனால், பின்னாட்களில் யாழ்ப்பா ணத்தை கைப்பற்றிய ஐரோப்பியர் காலத்தில் இந்த மந்திரிமனை திருத்தி அமைக்கப்பட்டதாகக் கூறப் படுகின்றது. எனினும், 1890ஆம் ஆண்டில் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்ட தாக இந்தக் கட்டடத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. 130 வருடங்களுக்கு மேற்பட்ட இந்த மந்திரி மனை பராமரிப்பின்றிக் காணப்பட்டது. இந்த நிலையில், அண்மையில் இந்தக் கட்டடத்தை பாது காக்க தொல்பொருள் திணைக்களம் கம்பிகளை பொருத்தியது. அந்தப் பணியும் இடைநிறுத்தப்பட் டது. இந்த நிலையிலேயே "கட்டடம் பாதுகாப்பற்ற தாக இருப்பதால் உள் நுழைய வேண்டாம்", என்று அறிவித்தல் பலகையை தொல்பொருள் திணைக்களம் தற்போது வைத்துள்ளது.(ஐ)

# நூல் வெளியீடும் நினைவுபேருரையும்

*யாழ்ப்பாணம், மார்ச் 07*

கலாநிதி ஆறு. திருமுரு கன் எழுதிய திருக்கேதீச்சர இலக்கியம் நூல் வெளியீடும் அறநெறிக்காவலர் அமரர் கந்தையா நீலகண்டன் நினை வுப் பேருரையும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்ற யாழ். பிராந்திய நிலையத்தில் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமி கள் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் ஆசி யுரையை ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல் கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குண ராஜா கலந்துகொள்வார். நூ லை யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முக லிங்கன் வெளியிட முதல் பிரதியை யாழ். பல்கலைக் கழக முன்னாள் கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் தம்பதியர் பெறுவர்.

நினைவுப்பேருரையை வட மாகாண நீர்ப்பாசன திணைக்கள பொறியியலா ளர் எந்திரி எ. சர்வராஜா யாழ். நீர்வளங்கள் மீதான ஆபத்துகளும் வாய்ப்புகளும் என்ற தலைப்பில் ஆற்றுவார்.

# நித்தியஸ்ரீ மகாதேவனின் இசைக்கச்சேரி யாழில்!



*யாழ்ப்பாணம், மார்ச் 07*

காரைநகர் முத்துமாரியம் மன் ஆலய திருவிழாவில் பிரபல தென்னிந்திய பாடகி நித்தியஸ்ரீ மகாதேவன், அவரின் புதல்வி இணைந்து நடத்தும் இன்னிசை நிகழ்வு நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பெருந்திரு விழாவில் 6ஆம் திருவிழாவான எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை இரவு 8 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறும் என்று திருவிழா உபயகாரர்களான கணேசபிள்ளை பாலச்சந்தி ரன், சுப்பிரமணியம் கதிர் காம நாதன் ஆகியோர் தெரிவித்துள்ளனர். (ஐ-03)

# மெய்வன்மை போட்டி


*யாழ்ப்பாணம், மார்ச் 07*

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் வரு டாந்த இல்ல மெய் வன்மை போட்டி நாளை புதன் கிழமை மதியம் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலையின் மைதா னத்தில்அதிபர் க. தவகீஸ் வரன் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில், பிர தம விருந்தினராக பாட சாலையின் பழைய மாண வரும் இளைப்பாறிய கணக் காளருமான பரராஜசிங்கம் சாந்தகுமார் பங்கேற்கவுள் ளார்.

சிறப்பு விருந்தினராக, யாழ். கல்விக் கோட்டக் கல் விப் பணிப்பாளர் ஆ.யோகலிங் கம் கலந்துகொள்வார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**மார்ச் - 07 செவ்வாய்க்கிழமை**
**சுபகிருது வருடம் - மாசி 23**
**நல்ல நேரம் : 07.30 - 09.00**
**ராகு காலம் : 03.00 - 04.30**
**திதி : திரையோதசி**




**மேடம்**
குடுநட்பு வட்டம் விரியும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**இடபம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு.பழைய சம்பவங்கள் நினைவுக்கு வரும். எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. வாகனம் வாங்குவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கடகம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். பழைய பிரச்சினைகள் தீரும்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள்.சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள். நர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**கன்னி**
விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். உடல் அசதி சோர்வு வந்து விலகும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**துலாம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியைபைசல் செய்வீர்கள். புதிய கோணத்தில் யோசித்து பழைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். சிறப்பான நாள்.

**விருட்சிகம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். அந்தஸ்து உயரும் நாள்.


**தனுசு**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும்.கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள்.

**கும்பம்**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கூடுதல் லாபம் கிடைக்கும்.

**மீனம்**
விஐபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனு கூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர் வந்து பேசுவார்கள். தொட்டது துலங்கும் நாள்.

# கீழடி தொல்லியலை பொது மக்கள் காண வசதியாக அருங்காட்சியகம்!



*சென்னை, மார்ச் 07*

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை உலகத் தமிழர்கள் மற்றும் பொதுமக்கள் கண்டு களிக்கும் வகையில் இரண்டு ஏக்கர் நிலப் பரப்பில் 31 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் 18.43 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கீழடி அருங்காட்சியகத்தை திறந்து வைத்தார்.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கீழடி அகழாய்வுத் தளத்தில் 2018ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து தற்போது வரை ஐந்து கட்டடங்களாக அகழாய்வு மேற்கொண்டு வருகிறது. தமிழர்களின் பண்பாட்டின் முக்கியத்துவம் மற்றும் தொன்மையை நிரூபிக்கவும், அதை உலகளவில் கொண்டு செல்லவும் தொல்லியல் துறை உலகப் புகழ்பெற்ற அறிவியல் ஆய்வகங்களுக்கு கீழடியில் கண்டெடுக்கப்பட்ட முக்கியமான கண்டுபிடிப்புகளை அனுப்பி அதிகாரபூர்வமான முடிவுகளைப் பெற்றுள்ளது.

கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட மாதிரிகளின் அறிவியல் காலக்கணிப்பு கி. மு. ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வைகை ஆற்றங்கரையில் நகரமயமாக்கல் இருந்ததை உறுதிப்படுத்தியது. மேலும், கங்கைச் சமவெளியின் நகரமயமாக்கலுக்கு சமகாலமானது என்பதையும் உறுதிபடுத்தியுள்ளது. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் தமிழ் சமூகம் கல்வியறிவும் எழுத்தறிவும் பெற்றிருந்தனர் என்பதை அறிவியல் அடிப்படையில் நிலைநிறுத்தியுள்ளது.

கீழடியில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்கள் நகர நாகரிகத்திற்கான கூறுகளை வெளிப்படுத்தியுள்ளது. பண்டைத் தமிழ்ச் சமூகம் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் எழுத்தறிவு பெற்றும், நகர நாகரிகத்துடனும் மேம்பட்ட தமிழ்ச் சமூகமாகவும் விளங்கியதை கீழடி அகழாய்வு முடிவுகள் வாயிலாக அறிவியல் பூர்வமாக தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை நிலை நிறுத்தியுள்ளது.

கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் உலகத் தமிழர்கள் பொது மக்கள் கண்டு களிக்கும் வகையில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் 31,000 சதுர அடி பரப்பளவில் 18.43 கோடி ரூபாய் செலவில் கீழடி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# வடமாநில தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்

## தமிழக அரசை கோருகிறார் திருமாவளவன்

*சென்னை, மார்ச்ட 07*

வடமாநில தொழிலாளர்கள் ஏறக்குறைய கொத்தடிமைகளைப் போலவே நடத்தப்படுகிறார்கள் என்றும், தமிழ்நாடு அரசு அவர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு சட்டப்படி அவர்களுக்குள்ள பிற உரிமைகளையும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “பீகார் மாநிலத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் படுகொலை செய்யப்பட்டார்கள் என்கிற பொய்யான செய்தியை வேண்டுமென்றே சமூக ஊடகங்களின் மூலமாகப் பரப்பி நாடு முழுவதும் பதற்றத்தை ஏற்படுத்தியவர்கள்மீது தமிழ்நாடு பொலிஸார் வழக்கு பதிவு செய்திருப்பதை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வரவேற்கிறோம். இது திட்டமிட்ட பயங்கரவாத சதி என்பதால் இதன் பின்னணியில் உள்ள அனைவர் மீதும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை சீர்குலைப்பதற்காகவும் தமிழ்நாடு அரசுக்கு அவப்பெயரை உருவாக்குவதற்காகவும் திட்டமிட்ட முறையில் பாஜகவும் அதனுடைய துணை அமைப்புகளும் செயல்பட்டு வருகின்றன. திமுக தலைமையிலான இந்த அரசில் சட்டம் - ஒழுங்கு சரியில்லை என்கிற தோற்றத்தை அவர்கள் உருவாக்கப் பார்க்கிறார்கள். அத்துடன், தமிழக முதல்வருக்கு இந்திய அளவில் அவப்பெயரை உருவாக்கவும் முயற்சிக்கிறார்கள்.

ஒருபுறம் தமிழ்நாட்டில் உள்ள வடமாநிலத் தொழிலாளர்களுக்கு எதிராக வெறுப்புப் பிரசாரத்தை மேற்கொள்வது, இன்னொரு புறம் தமிழ்நாட்டில் வட மாநிலத்தவரைப் படுகொலை செய்கிறார்கள் என்று வதந்தி பரப்புவது என இரண்டு வகையில் சனாதன சக்திகள் இந்த சதி வேலையில் ஈடுபட்டிருக்கின்றன. எனவே, பீகார் உள்ளிட்ட வட மாநிலங்களைச் சார்ந்த கூலித் தொழிலாளர்கள் குறித்து தமிழ்நாட்டில் செய்யப்படும் அவதூறுப் பிரசாரங்களைத் தமிழ்நாடு அரசு கட்டுப்படுத்த வேண்டும். தமிழ் நாட்டைச் சேர்ந்த இலட்சக் கணக்கானவர்கள் பிற நாடுகளி லும், பிற மாநிலங்களிலும் புலம் பெயர்ந்த தொழிலாளர்களாக உள்ளனர் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண் டும் - என்று தெரிவித்துள்ளார். (ஐ)

# அண்ணாமலைமீது பொலிஸார் வழக்கு

*சென்னை, மார்ச் 07*

வட மாநிலத் தொழிலாளர் குறித்து அறிக்கை வெளியிட்ட பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலைமீது 4 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பணிபுரியும் வட மாநிலத் தொழிலாளர்கள்மீது தாக்குதல் நடத்தப்படுவதுபோன்றும், பீஹார் தொழிலாளர்கள் வெளியேறுவதாகவும் சமூக வலைதளங்களில் தவறான செய்திகள் பரப்பப்பட்டன. தமிழகத்திலும் இந்த காணொலி பரவியது.

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை நேற்று முன்தினம் ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார். அதில், பல்வேறு குற்றச்சாட்டுகளை முன் வைத்திருந்தார். இந்நிலையில், வதந்தி பரப்புதல், வன்முறையைத் தூண்டுதல், இரு பிரிவினரிடையே மோதலை ஏற்படுத்தல் உள்ளிட்ட 4 பிரிவுகளின் கீழ் அண்ணாமலை மீது சென்னை மத்திய குற்றப் பிரிவு சைபர் க்ரைம் பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

தவறான தகவல்களை பரப்பும் வகையில் அறிக்கை வெளியிட்டதால், அண்ணாமலைமீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரிகள் விளக்கம் அளித்தனர்.

இதனிடையே செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்ட பா. ஜ. க. தமிழக தலைவர் அண்ணாமலை, “அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவற்றை காணொலியாகவும் வெளியிடுகிறேன். தி. மு.கவுக்கு திராணி இருந்தால், என்னை கைது செய்யவும். பொய் வழக்குகள் மூலம் ஜனநாயகக் குரல்வளையை நசுக்கி விடலாம் என்று எண்ணுகிறீர்கள். ஒரு சாமானிய மனிதனாக சொல்கிறேன். 24 மணி நேரம் அவகாசம் அளிக்கிறேன். முடிந்தால் என் மீது கை வையுங்கள். அணி திரள்வோம். அநியாயத்துக்கு எதிராக வென்று காட்டுவோம் - என்று கூறியுள்ளார்.

(ஐ)

# யாழ்ப்பாணத்துடனான சேவைகளை விஸ்தரிக்க ஆர்வம் காட்டும் சர்வதேச விமான நிலையங்கள்!

கொழும்பு, மார்ச் 07

யாழ்ப்பாணத்தில் சர்வதேச விமான நிலையம் செயல்படத் தொடங்கியதன் பின்னர், தற்போது பல விமான நிலையங்கள் தமது சேவையினை யாழ்ப்பாணத்துடன் விஸ்தரிப்பதில் ஆர்வம் காட்டுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாணத்துடன் சேவைகளை மேற்கொள்ள புதிய இந்திய விமான நிறுவனங்கள் ஆர்வம் கொண்டுள்ளதாக இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண வர்த்தக மற்றும் தொழில்துறை சம்மேளனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் கண்காட்சியின் இறுதி நாளான நேற்று முன்தினம் கலந்துகொண்டு கருத்து தெரிவித்துக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் மற்றும் சென்னைக்கு இடையே வாராந்தம் நான்கு விமான சேவைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்த அவர், முழு அளவிலான பயணிகள் பயணம் செய்வதாகவும் குறிப்பிட்டார்.

பெங்களூர் போன்ற ஏனைய இடங்களுடனான சேவையை விஸ்தரிப்பதில் தாம் ஈடுபாட்டை கொண்டுள்ளதாகவும் இந்திய துணை தூதுவர் ராகேஷ் நட்ராஜ் தெரிவித்தார்.

இதேவேளை, வர்த்தக சரக்கு சேவைகளையும் ஆரம்பிக்க இந்திய வர்த்தக சமூகம் எதிர்பார்ப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்படியான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டால், வட மாகாண மக்கள் தமது உற்பத்தி பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பு ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதில் எதிர்க்கட்சி அர்ப்பணிப்பு காட்டவில்லை!

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு



**கொழும்பு, மார்ச் 07**

**தற்போதைய பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதில் எதிர்க்கட்சி எந்த ஓர் அர்ப்பணிப்பையும் காட்டவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஓர் அரசியல் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர் ஒருவர், தமது ஆங்கில மொழித் திறமையின் மூலம் சர்வதேச சமூகத்தை நம்ப வைக்க முடியும் என்று நினைக்கிறார்.

மற்றொருவர் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை விடுத்து சர்வதேச சமூகத்தை நம்ப வைப்பதாக கூறுகிறார்.

சிக்கலான பிரச்னைகளுக்கு பதிலளிக்கும் வகையில் கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன என பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பொது நிகழ்வொன்றில் தெரிவிக்கிறார்.

இந்தநிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து அதிகாரத்தை கைப்பற்றினால் தேசத்தை நடத்த முடியும் என ஒருவர் நினைத்தால் அது தவறாகும் - என்றார். (அ)

# சாரதிகள் இன்மையால் ரயில் சேவைகள் இரத்து!

கொழும்பு, மார்ச் 07

60 வயதுக்கு மேற்பட்டவர்களை ஒரு வருட காலத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்துவதற்கு பொதுச் சேவை ஆணைக்குழு அனுமதி வழங்காததன் காரணமாக நீண்ட தூர சேவைகள், எரிபொருள் போக்குவரத்து மற்றும் சரக்கு ரயில் சேவைகள் உட்பட பல ரயில் சேவைகள் தடைப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதி முதல் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓய்வு அளிக்கும் அரசின் கொள்கை முடிவுடன் பல ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டதை கருத்தில் கொண்டு, 60 வயதுக்கு மேற்பட்டவர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

எனினும், குறித்த தீர்மானம் நடைமுறைப்படுத்தப் படாததால், கடந்த சில தினங்களில் 60 வயதுக்கு மேற்பட்ட சுமார் 20க்கும் அதிகமான ரயில் சாரதிகள் தமது சேவையை நிறைவு செய்துள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, அநுராதபுரம் மற்றும் பதுளை உள்ளிட்ட பகுதிகளுக்கு சேவையில் ஈடுபடுத்தப்படும் ரயில் சேவைகள் சில தடைப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# அரசாங்கத்தின் அத்தியாவசியமற்ற 100 நிறுவனங்களுக்கு மூடுவிழா!

கொழும்பு, மார்ச் 07

அரசாங்கத்தின் கீழ் உள்ள 100 இற்கும் மேற்பட்ட ஆணைக்குழுக்கள், முகவரகங்கள் மற்றும் ஆலோசனைக் குழுக்களின் சேவைகள் தேவைப்படாத நிலையில், அவற்றின் செயற்பாடுகளை கைவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஆங்கில பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆணைக்குழுக்கள், முகவரகங்கள் அல்லது ஆலோசனைக் குழுக்களின் சேவைகளை அது சார் நிறுவனங்கள் அல்லது திணைக்களங்கள் ஊடாக செய்ய முடியும் என்பதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணிகள் ஆணைக்குழுவின் சேவைகள் எதிர்வரும் 31ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டு, அதன் செயற்பாடுகள் நிதியமைச்சின் கீழ் கொண்டு வரப்படவுள்ளதாக தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணிகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் 15 பேர் உட்பட ஏனைய அலுவலக ஊழியர்கள் என 36 ஊழியர்களுக்காக அரசாங்கத்தினால் 5.8 மில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது.

குறித்த ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு கடந்த மாத வேதனத்துக்காக மாத்திரம் 2.7 மில்லியன் ரூபா, பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்துக்கான மாதாந்த வாடகையாக 1.4 மில்லியன் ரூபா என மொத்த செலவுக்காக 5.1 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணிகள் ஆணைக்குழுவின் இந்த ஆண்டின் செலவுகளுக்காக மாத்திரம் 71 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணிகள் ஆணைக்குழுவின் பணிகள் முன்னர் நிதி மற்றும் பொது நிர்வாக அமைச்சகத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எனவே, தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணிகள் ஆணைக்குழுவின் ஊழியர்கள் பொதுநிர்வாக அமைச்சுக்குள் உள்வாங்கப்படுவார்கள்.

இதற்கிடையில், கடந்த 2021ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதமளவில் அப்போதைய ஜனாதிபதியால் நிறுவப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான ஆலோசனைக்குழுவின் செயற்பாடுகளும் நிறுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனைக்குழுவின் செயற்பாடுகளை நீதி அமைச்சின் கீழ் முன்னெடுக்குமாறு ஜனாதிபதி செயலகம் ஏற்கனவே அறிவுறுத்தியுள்ளது.

இதுவரை குறைந்தபட்சம் 50 ஆணைக்குழுக்கள் மற்றும் ஆலோசனைக்குழுக்கள் மூடப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளன, அத்துடன் இது போன்ற 50 ஆணைக்குழுக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற சுமார் 17 நிறுவனங்கள் கல்வி அமைச்சின் கீழ் இயங்குகின்றன, விரைவில் அவற்றின் செயற்பாடுகள் கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வரப்படவுள்ளதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது. (அ)

# புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ள பொது நிதிக்குழுத் தலைவர் பதவி

கொழும்பு, மார்ச் 07

பாராளுமன்ற பொது நிதிக் குழுவின் தலைவர் பதவிக்கான மோதல் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது,

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தனவை குழுவுக்கு தற்காலிக தலைவராக நியமித்த நிலையிலேயே இந்த முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் புதிய நியமனம், நிலையியல் கட்டளைகளை மீறுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குற்றஞ்சாட்டியுள்ளார்.

தற்காலிக அடிப்படையில் தலைவர் நியமனம், என்பது, குறித்த குழுவை பொறுத்தவரை நடைமுறையில் இல்லை என ஹர்ஷா டி சில்வா தெரிவித்தார்.

வஜிர அபேவர்தனவை அந்த பதவிக்கு நியமித்தமை நிலையியற் கட்டளைகளை மீறும் செயலாகும்.

குழுவுக்கான தலைவர் எதிர்க்கட்சியில் இருந்து வர வேண்டும்.

அறிவிக்கப்பட்ட உத்தரவுகளின் படி குறித்த பதவிக்கு பதில் தலைவர் ஒருவரை நியமிக்க எந்தவொரு ஏற்பாடும் இல்லை எனவும் அவர் கூறினார்.

இந்தநிலையில் பாராளுமன்ற பொதுநிதிக்குழுத் தலைவர் பதவி தொடர்பான இறுதி முடிவு இன்று எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நுகர்வோர் அதிகாரசபையின் அதிகாரிகளை பண்ணைகளுக்குள் அனுமதிக்க வேண்டாம்!

## முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 07

நீதிமன்ற உத்தரவின்றி கோழிப்பண்ணைகளை சோதனையிட வருகைத்தரும் நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகளை பண்ணைகளுக்குள் அனுமதிக்கவேண்டாம் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் இதனை தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றும் போதே அந்த சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க இதனை தெரிவித்தார்.

ஹல்மில்லவெள, அவுலேகம, மேலும் கும்புக்வெல, மற்றும் கொபெயிகனே ஆகிய பகுதிகளில் நுகர்வோர் அதிகார சபையினால் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதிக விலைக்கு முட்டையை விற்பனை செய்யும் வர்த்தகர்களை இலக்கு வைத்து இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்தார்கள் என தெரிவித்து நான்கு கோழிப்பண்ணை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, நாட்டிலுள்ள கோழிப்பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிகளிடையே பரவி வரும் தொற்றானது தற்போது நூற்றுக்கு 40 வீதமாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அரசுடன் இணையும் எண்ணம் எனக்கில்லை

## கூறுகிறார் ராஜித சேனாரத்ன



கொழும்பு, மார்ச் 07

**தேசிய அரசாங்கம் தொடர்பான பேச்சின் போது ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துடன் இணைய விருப்பம் தெரிவித்திருந்த போதிலும், தற்போது அரசாங்கத்துடன் இணைவதற்கான எந்தத் திட்டமும் தன்னிடம் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில், அவர் கடந்த காலங்களில் வகித்து வந்த சுகாதார அமைச்சர் பதவி வழங்கப்பட உள்ளதாக வெளியான செய்திகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

பொருளாதார நெருக்கடியை சமாளிக்க ஜனாதிபதியின் சமீபத்தைய வேலைத்திட்டம் உள்ளிட்ட திட்டங்களை பாராட்டி ராஜித சேனாரத்ன வெளியிட்ட சில அறிக்கைகளால் அவரது கட்சியின் மூத்த உறுப்பினர்களின் விமர்சனத்துக்கு ஆளானார்.

மேலும் சுகாதார அமைச்சர் போன்ற ஒரு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டால், நிலவும் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதில் முக்கியப் பங்காற்ற முடியும் என கடந்த வாரம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ராஜித சேனாரத்ன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ)

# தேர்தலைப் பிற்போடுவது ரணிலின் பரம்பரை வழக்கம்

## கூறுகின்றார் உதய கம்மன்பில

கொழும்பு, மார்ச் 07

தேர்தலை பிற்போடுவது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பரம்பரை வழக்கம் என்றும் எவ்வாறாயினும் தேர்தலை பிற்போட ஒரு போதும் இடமளிக்கமுடியாது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

தேர்தல் விவகாரத்தில் உயர் நீதிமன்றம் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு கடுமையான தடை விதித்துள்ள நிலையில் உரிமையை வென்றெடுக்கப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் அவர் கூறினார்.

மேலும் மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக் கூறவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுதந்திரத்தின் பின்னர் நாட்டில் தோற்றம் பெற்ற தமிழருக்கு எதிராக இனக் கலவரம், வன்முறை மற்றும் 30 வருட கால ஆயுத போராட்டம் ஆகியவற்றை ஐக்கிய தேசியக் கட்சியே ஆரம்பித்தது என அவர் குற்றம்சாட்டினார். (அ)

# அரசியலமைப்புச் சபையின் விசேட கூட்டம் 9 ஆம் திகதி

கொழும்பு, மார்ச் 07

தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன ஆணைக் குழுக்களுக்கான உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அரசியலமைப்பு சபை எதிர்வரும் 9ஆம் திகதி மீண்டும் கூடும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

உறுப்பினர்கள் நியமனம் தொடர்பான சில முக்கிய தீர்மானங்கள் அங்கு எடுக்கப்பட உள்ளதாகவும் சபாநாயகர் குறிப்பிட்டார்.

நிதி ஆணைக்குழு, கொள்முதல் ஆணைக்குழு, கணக்காய்வு ஆணைக்குழு, இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, நீதிச் சேவை ஆணைக்குழு, பொதுச் சேவை ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு என்பன புதிய உறுப்பினர்களை நியமிக்கும் ஏனைய ஆணைக் குழுக்கள் ஆகும்.

அந்த ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பான முதற்கட்ட பணிகள் இந்த நாட்களில் நடைபெற்று வருகின்றன. (அ)

# தொடர்ந்தும் பேச்சில் ஈடுபடுவது தேர்தலை மேலும் தாமதப்படுத்தும்

## சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 07

திறைசேரியின் செயலாளர் உள்ளிட்ட தரப்பினருடன் தேர்தல்கள் ஆணைக்குழு தொடர்ந்தும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது உள்ளூராட்சித் தேர்தல் குறித்த தீர்மானம் எடுப்பதை மேலும் தாமதப்படுத்தும் என தமிழ் அரசுக் கட்சி தெரிவித்துள்ளது.

பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதன் பின்னர் வாக்கெடுப்புக்கான புதிய திகதியை அறிவிப்போம் என தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிடுவது உள்ளூராட்சித் தேர்தலை தொடர்ந்து தாமதப்படுத்தும் செயற்பாடு என கருதுவதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

திறைசேரியின் செயலாளர், அரசாங்க அச்சகமும் தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்ற ஆணைக்குழுவின் அறிவிப்பின் பின்னணியில் தேர்தல் நடவடிக்கைகளுக்கான நிதியை விடுவிப்பதை தடுக்கும் செயற்பாடுகளுக்கு உயர்நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான நிதி விடுவிப்பு தொடர்பாக உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள இந்த தடையுத்தரவு குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள சுமந்திரன், 20ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலுக்கான புதிய திகதி அறிவிக்கப்படவேண்டும் - என்றார். (அ)

# எழுத்துமூல அறிவிப்பு எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை

## கட்சியில் இருந்து நீக்கியமை குறித்து பீரிஸ்

கொழும்பு, மார்ச் 07

பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பதவியில் இருந்து தம்மை நீக்கியதாக எழுத்துமூல அறிவிப்பு எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், அவ்வாறான அறிவித்தல் கிடைத்தால் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தயாராக இருப்பதாக குறிப்பிட்டார்.

அண்மையில் உயர் நீதிமன்றம் வழங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பில் ஜனநாயகம் நிலை நாட்டப்பட்டுள்ளது என்றும் அதற்கு தலை வணங்குவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை அரசாங்கம் விரும்பாமலோ தேர்தலை சந்திக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# யாழ்ப்பாணத்தில் ஆலயங்களில் திருட்டு: இருவர் பொலிஸாரால் அதிரடியாக கைது

யாழ்ப்பாணம், மார்ச் 07

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்களில் நகைத் திருட்டில் ஈடுபட்டு வந்த கும்பல் இளவாலை பொலிஸாரால் அதிரடியாக கைதுசெய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, நுணசை சிவன் கோவிலில் நடந்த உற்சவத்தில் சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது.

ஓட்டோவில் வந்த வெளிமாவட்டத்தைச் சேர்ந்த மூவர் அடங்கிய கும்பலால் இந்த திருட்டு மேற்கொள்ளப்பட்டது.

அண்மையில் ஆலயங்களில் இடம்பெற்ற பல்வேறுபட்ட நகைத் திருட்டுகளுடன் குறித்த கும்பலுக்கு தொடர்புள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது

ஒன்பது இலட்சம் ரூபா பெறுமதியான ஐந்தரை பவுண் நகை இவ்வாறு களவாடப்பட்டது. இந்நிலையில் பெண் (வயது-43) மற்றும் ஆண் (வயது-26) ஆகியோர் கைது செய்யப்பட்ட அதேவேளை ஒரு பெண் தலைமறைவாகியுள்ளார்.

இதன்போது திருடப்பட்ட நகைகளும் மீட்கப்பட்டன. (அ)

# யாழில் 30 லீற்றர் கசிப்புடன் சந்தேக நபர் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 07

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வாதரவத்தை - பெரிய பொக்கணை பகுதியில் 30 லீட்டர் கசிப்புடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இந்த கைது நடவடிக்கை நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட்டது.

வாதரவத்தை - பெரிய பொக்கணை பகுதியைச் சேர்ந்த 42 வயதுடையவரே சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தனது வீட்டுக்கு அருகே உள்ள காணி ஒன்றில், கசிப்பினை போத்தல்களில் அடைக்கும்போது காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சான்றுப் பொருட்களுடன் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டவுடன் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# அனைத்து தமிழ் எம்.பிக்களும் ஒன்றிணைந்தமை மகிழ்ச்சியே!

## அமைச்சர் டக்ளஸ் பெருமிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 07

இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக வடக்கை பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஒன்றிணைந்திருப்பது மகிழ்ச்சியளிப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன், சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்டோரும் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அங்கஜன் இராமநாதனும் பங்கேற்றனர்.

இக்கலந்துரையாடலில், இந்தியக் கடற்றொழிலாளர்கள் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு எந்தவகையிலும் அனுமதிப்பதில்லை என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதுடன், இது தொடர்பாக சம்மந்தப்பட்ட தரப்புக்களுக்கு அறிவிப்பதற்கும் முடிவு செய்யப்பட்டது.

இந்திய கடற்றொழிலாளர்களின் சட்டவிரோத தொழில் முறைகள் முழுமையாக நிறுத்த, இராஜதந்திர மற்றும் சட்ட ரீதியாகவும், கச்சதீவு சந்திப்புக்கள் போன்று நட்பு ரீதியாகவும் தொடர்ச்சியாக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இந்நிலையில் மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் அனைத்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் நலன்களுக்கு அப்பால் இணைந்து செயற்படவேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு என்றும் அமைச்சர் டக்ளஸ் கூறினார். (அ)

# இவ்வாண்டு தேர்தல் நடத்தும் கட்டாயம் எதுவுமே இல்லை!

## கூறுகின்றார் ஜனாதிபதி ரணில்



கொழும்பு, மார்ச் 07

**“இந்த ஆண்டு தேர்தலை நடத்தவேண்டிய கட்டாயம் எதுவுமில்லை. உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பிலும், தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் குறித்தும் பாராளுமன்றமே முடிவெடுக்கும்.”**

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேர்தலுக்காக ஒதுக்கிய நிதியை விடுவிக்கப்படுவதற்கு முட்டுக்கட்டை போட வேண்டாம் என்று உயர்நீதிமன்றம் இடைக்காலக் கட்டளை வழங்கியுள்ள நிலையில், ஜனாதிபதியின் இந்தக் கருத்தும் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“மக்கள் பிரதிநிதிகள் உள்ள அதியுயர் சபையே நாடாளுமன்றம். எனவே, பாராளுமன்றத்தின் தீர்மானங்களை எவரும் சவாலுக்குட்படுத்த முடியாது எனவும், பாராளுமன்றத்துக்குச் சவால் விடுத்து எவரும் செயற்பட முடியாது எனவும் மீளவும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

தேர்தல்கள் ஆணைக்குழு முதலில் ஒருமித்த கருத்துக்கு வர வேண்டும். அதில் உள்ளவர்கள் இருவேறு திசைகளில் பயணிக்கின்றனர். அவர்களுக்கிடையில் ஒருமித்த நிலைப்பாடு இல்லை.

இந்த வருடம் தேர்தல் நடத்த வேண்டிய கட்டாயம் இல்லை. நாட்டின் பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு தேர்தலை எப்போது நடத்துவது என்று பாராளுமன்றம் முடிவெடுக்கும்” - என்றார். (அ)



# சஜித்-பார்த்தசாரதி கொழும்பில் பேச்சு

கொழும்பு, மார்ச் 07

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் ஓய்வுபெற்ற இந்திய இராஜதந்திரி கோபாலசுவாமி பார்த்தசாரதி ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லேவும் கலந்துகொண்டார்.

இலங்கையின் கடந்தகால அரசியல் மற்றும் முக்கிய விடயங்கள் குறித்து இந்த சந்திப்பில் பேசப்பட்டன.

1983 கறுப்பு ஜூலைக்குப் பிறகு அன்றைய இந்திய பிரதமர் இந்திரா காந்தி இலங்கையில் முரண்பட்டு நிற்கும் இரு தரப்பினருக்கும் இடையே மத்தியஸ்தம் செய்வதற்கு இந்தியாவின் நல்லெண்ண உதவிகளை வழங்க முன்வந்தார்.

அந்த மத்தியஸ்த முயற்சிகளை முன்னெடுப்பதற்கு ஆற்றல் வாய்ந்த விசேட தூதுவர் ஒருவரை நியமிக்கவேண்டியிருந்தது. அதற்குப் பொருந்துபவராக இராஜதந்திர பதவிகள் பலவற்றை வகித்தவரும் முன்னாள் வெளியுறவுச் செயலாளருமான கோபாலசுவாமி பார்த்தசாரதியை இந்திரா காந்தி அடையாளம் கண்டார்.

இந்திரா காந்தியின் நம்பிக்கைக்கு பெரிதும் பாத்திரமானவர் பார்த்தசாரதி என்பது ஒரு மேலதிக அனுகூலமாகவும் இருந்தது. வெளிநாட்டுக் கொள்கையிலும் உள்நாட்டுக் கொள்கையிலும் சர்ச்சைக்குரிய விவகாரங்கள் தொடர்பில் அடிக்கடி அவருடன் திருமதி காந்தி ஆலோசனை கலப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிராந்திய சபைகளுக்கு அதிகாரப்பரவலாக்கலுக்கான ஒரு தொகுதி யோசனைகள் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்தியதே பார்த்தசாரதியின் தனித்துவமான பங்களிப்பாகும். அந்த யோசனைகளே ‘இணைப்பு சி’ என்று பிரபல்யமாக அழைக்கப்படுபவையாகும்.

1983 ஒகஸ்ட் தொடக்கம் டிசெம்பர் வரையான 4 மாத காலகட்டத்திற்குள் கொழும்பிலும் புதுடில்லியிலும் ஜனாதிபதி ஜயவர்தனவுடன் நடத்திய சந்திப்புகளில் இந்த இணைப்பு ‘சி’ யைப் பூரணப்படுத்தும் செயற்பாடுகளை பார்த்தசாரதி நிறைவுசெய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# வடமாகாண கடற்றொழிலாளர்களின் ஒற்றுமையை குழப்புபவர் டக்ளஸே!

## அன்னராசா குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 07

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது சுயநலத்துக்காக வடக்கு கடற்றொழிலாளர்களை பிரித்தாளுகின்றார் என ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

யாழில் நேற்று முன் தினம் நடந்த ஊடக சந்திப்பில் இந்த விடயத்தை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - இலங்கையிலே மாறி மாறி பல இடங்கள் தாரை வார்க்கப்படுகின்றன.

ஒரு சம்பவத்தை மறைப்பதற்காக இன்னுமொரு சம்பவத்தை அரசாங்கமே உருவாக்குகின்றது.

வடக்கில் உள்ள தமிழ் அமைச்சர் மேல் எமக்கு நம்பிக்கை இல்லை. அவர் எம்மைப் பிரித்துதான் நினைத்தவற்றை சாதிக்கத் துடிக்கின்றார்.

இதனாலேயே நாம் நேரடியாக ஜனாதிபதியைச் சந்திக்கச் சந்தர்ப்பம் கோரி கடிதம் அனுப்பியுள்ளோம்.

வடக்கில் உள்ள 50000 கடற்றொழிலாளர் குடும்பங்களின் பிரச்சினைக்கும் ஓர் அடித்தளமாக இந்தச் சந்திப்பு அமைய வேண்டும் - என்றார். (அ)

# முட்டை இறக்குமதி செய்வதால் பறவை காய்ச்சல் பரவும் அபாயம்

கொழும்பு, மார்ச் 07

இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதால் இலங்கையில் பறவைக் காய்ச்சல் பரவும் அபாயம் அதிகம் என விவசாயத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் கே.பி.குணரத்ன தெரிவித்தார்.

பறவைக் காய்ச்சல் அதிகம் உள்ள தமிழகத்திலிருந்து முட்டைகள் முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மேலும், பறவைக் காய்ச்சல் பரவி வருவதால் அங்கு முட்டை விலை குறைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முட்டை தொடர்பாக இந்தியாவினால் வழங்கப்படும் தரநிலை அறிக்கை இன்று கிடைக்கப்பெறும் என வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறாத காரணத்தினால் முட்டை இறக்குமதியில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையை இந்திய விலங்குகள் மற்றும் சுகாதாரத் துறை வழங்கவுள்ளது. (அ)

# கோட்டாவுக்கு ஏற்பட்ட நிலையே ரணிலுக்கும்!

## வசந்த யாப்பா பண்டார சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 07

பிழையான தீர்மானங்களை எடுத்ததால்தான் கோட்டாபய ராஜபக்ச நாட்டை விட்டுத் தப்பியோடும் நிலைக்குத் தள்ளப்பட்டார், இதுபோன்ற நிலையே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஏற்படும் என சுதந்திர மக்கள் சபை உறுப்பினரும், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின்போது இந்த விடயத்தை அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலும், பொருளாதாரப் பிரச்னையும் ஒரே பிரச்னைதான்.

தேர்தல் என்பது எமது அடிப்படை உரிமை. இதை அரசாங்கத்தால் எந்தக் கட்டத்திலும் மீற முடியாது. பிழையான தீர்மானங்களை எடுத்ததால்தான் அந்தத் தலைவர் நாட்டை விட்டுத் தப்பியோடும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

இதுபோன்ற நிலை தற்போதைய ஜனாதிபதிக்கும் ஏற்படும் என தெரிகின்றது.

சர்வதேச நாடுகள் எங்களுக்கு நிதி உதவி செய்ய வேண்டும் என்றால் அவர்கள் நம்பக்கூடிய ஆட்சியை எதிர்பார்ப்பார்கள்.

மக்களின் அடிப்படை உரிமையை மீறி இவ்வாறு தேர்தலை ஒத்திப்போட்டால் எப்படி அவர்கள் இந்த அரசாங்கத்தை நம்புவார்கள்? எப்படி உதவி செய்வார்கள்? இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு மக்களிடம் வரவேற்பில்லை. அரசாங்கத்திடம் வாக்குப் பலம் இல்லை. அதனால்தான் அவர்கள் தேர்தலை ஒத்திப்போடுகின்றார்கள்.

சர்வதேச நாணய நிதியத்திடம் நாம் நிதி கேட்டுச் சென்றதன் பின்தான் பங்களாதேஷ் சென்றது. ஆனால், அவர்கள் முதலாவது தவணை நிதியைப் பெற்றுவிட்டார்கள்.

எமது விவகாரம் இன்னும் இழுபறியிலேயே உள்ளது. இந்த அரசாங்கம் மீது நாட்டு மக்களின் விசுவாசமின்மையே இதற்கு காரணம்.

சர்வதேச உதவி கிடைக்க வேண்டும் என்றால் உள்நாட்டு மக்களும் சர்வதேசமும் நம்பக்கூடிய அரசாங்கம் இருக்கவேண்டும்.

ஆனால், தேர்தலை ஒத்திப்போடப் போட அரசாங்கம் மீதான சர்வதேசத்தினதும் மக்களினதும் நம்பிக்கை குறையும்.

தேர்தலை ஒத்திப்போட்டால் தேர்தலைக் கேட்டு மக்களால் ஆர்ப்பாட்டம் செய்ய முடியாது. தாக்குதல் நடத்தப்படுகின்றது. அப்படியென்றால், மக்களின் உரிமையைப் பாதுகாக்க நாங்கள் என்னதான் செய்வது - என்றார். (அ)

# சமூக நலன் கொடுப்பனவுகளைப் பெற போலித் தகவல்கள் வழங்கவேண்டாம்

கொழும்பு, மார்ச் 07

சமூக நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதற்காக போலியான தகவல்களை வழங்குவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான இயலுமை காணப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 37 இலட்சம் விண்ணப்பங்களில் 02 இலட்சம் விண்ணப்பங்கள் இதுவரை பரிசீலிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பரிசீலனை நடவடிக்கைகளுக்காக வருகை தரும் அதிகாரிகளுக்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்குமாறும் அமைச்சர் கோரிக்கை விடுத்தார்.

இந்த மாத இறுதிக்குள் விண்ணப்பங்கள் தொடர்பான பரிசீலனைகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார். (அ)

# புதிய சீனப் பிரதமர்: அதிகாரத்தில் தனது பிடியை வலுவாக்கும் அதிபர் ஷி ஜின்பிங்!

ஸ்டீபன் மெக்டோனல்

சீனாவில் இந்த வார இறுதியில் தொடங்கும் தேசிய மக்கள் மாநாடு, அந்நாட்டின் அதிகாரத்தில், அதிபர் ஷி ஜின்பிங்கின் பிடி இறுகுவதன் உச்சபட்சக் குறியீடாக இருக்கும்.

தன்னை மையமாக வைத்து சீன கம்யூனிஸ்ட் கட்சியை ஷி ஜின்பிங் மாற்றி அமைத்துள்ளார். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை அவரை எதிர்ப்பதற்கு ஆளே இல்லை.

கிட்டத்தட்ட 3,000 பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் ரப்பர் ஸ்டாம்ப் அமர்வான வருடாந்திர அரசியல் கூட்டத்தில், சீன பிரதமர் மாற்றம் செய்யப்படுவதில் இது வெளிப்படும்.

உலகின் 2வது பெரிய பொருளாதார நாட்டின் பிரதமராக தேர்ந்தெடுக்கப்படு வர் பெயரளவில் அந்நாட்டை நிர்வகிப்பவராக இருப்பார். அதிகார அமைப்பில் ஷி ஜின்பிங்கிற்கு அடுத்த இடத்தில் அவர் இருப்பார்.

தேசிய மக்கள் காங்கிரஸின் முதல்நாள் அமர்வில் சீனாவின் தற்போதைய பிரதமர் லீ காச்சியாங் நடுநாயகமாக இருப்பார். பின்னர், புதிய பிரதமர் -அனேகமாக லி கியாங்- இந்த இடத்தை பெறுவார்.

ஷி ஜின்பிங் மீதான விசுவாசத்தை வைத்து பார்க்கும் போது லி காச்சியாங் , லி கியாங் இடையே மிகப்பெரிய வேறுபாடுகள் உள்ளன.

கடந்த அக்டோபர் மாதம் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டத்தில், நாட் டின் மிகவும் சக்திவாய்ந்த குழுவான ஏழு பேர் கொண்ட பொலிட்பீரோ நிலைக்குழுவிற்கு புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவர்கள் அனைவரும் ஷி ஜின்பிங்கிற்கு விசுவாசமானவர்கள்.

தற்போது நடைபெறவுள்ள தேசிய மக்கள் காங்கிரஸில் பல்வேறு துறைகள் மற்றும் அமைச்சகங்களின் தலைமை பதவியும் மாற்றப்படவுள்ளன. ஷி ஜின்பிங்கிற்கு விசுவாசமானவர்களுக்கே இந்த பதவிகள் வழங்கப்படலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

அவர்கள் தகுதியற்றவர்கள் என்று அர்த்தமல்ல, ஆனால் ஷி ஜின்பிங்கிற்கு அவர்கள் அச்சமில்லாமல், வெளிப்படையான ஆலோசனைகளை வழங்கத் தயாராக இருப்பார்களா? என்ற கேள்வி எழுகிறது.

'இந்த மாற்றங்கள் மூலம் ஒருபுறம், ஷி தனது புதிய தலைமையை வைத்து தான் செய்ய விரும்புவதை செய்து கொள்ள முடியும், ஆனால், மறுபுறம், தன் கருத்துக்கு எதிர் கருத்தே இல்லாத சூழலில் அவர் சிக்கிக்கொள்ளும் ஆபத்து உள்ளது" என்று வணிகப் பிரமுகர் ஒருவர் கூறினார்.

**சீனாவிற்கு இந்த நியமனங்கள் எந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்?**

லி கியாங், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாவது அதிகாரம் மிக்க நபராக நியமிக்கப்பட்டபோது, பலரையும் இது ஆச்சரியப்படுத்தியது.

சீனாவின் நிதி தலைநகரான ஷாங்கா யில் கடந்த ஆண்டில் 2 மாதங்களுக்கு அவரது மேற்பார்வையின் கீழ் கொரோனா பொதுமுடக்கம் அமல்படுத்தப்பட்டது. இந்த பொதுமுடக்கம் மிக மோசமாக திட்டமிடப்பட்டிருந்தது. டெலிவரி பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் அவர்கள் வீடுகளிலேயே அடைத்து வைக்கப்பட்டதால், வெளியில் அனுமதிக்கப்படாத பல லட்சம் மக்களுக்கு உணவுவையும் மருந்துகளையும் திறமையாக கொண்டு செல்ல முடியாமல் போனது.

கடுமையான உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. தங்கள் வாழ்க்கையை அழு கிய காய்கறிகளை வைத்து ஓட்ட வேண் டியுள்ளது என்று கூறி அது தொடர்பான புகைப் படங்களையும் ஷாங்காய் மக்கள் சமூக ஊடகங்களில் வெளியிட்டனர்.

இந்த பொதுமுடக்கம் மக்களுக்கு கடும் உளைச்சலை ஏற்படுத்தியது. தங்களை கட்டுப்படுத்த அமைக்கப்பட்ட வேலிகளை அவர்கள் உதைத்து தள்ளினர். ஜீரோ கோவிட் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த காவலர்களுடன் மக்கள் சண்டையிட்டனர்.

இத்தகைய மாபெரும் தோல்விக்கு பொறுப்பான நபருக்கு எப்படி முழு நாட்டையும் நிர்வகிக்கும் பணியை வழங்க முடியும் என பலரும் கேள்வி எழுப்புகின்றனர்.

"அவர் புத்திசாலி, சிறந்த நிர்வாகி. ஆனால் நிச்சயமாக, ஷி ஜின்பிங் மீதான விசுவாசத்தின் காரணமாகவே அவருக்கு இந்த பணி கிடைத்தது. ஷி ஜின்பிங் குதிக்க சொன்னால், எவ்வளவு உயரத்தில் இருந்து குதிக்க வேண்டும் என்று லி கியாங் கேட்பார்" என்று கூறுகிறார் சீனாவில் உள்ள ஐரோப்பிய யூனியன் சேம்பர் ஆஃப் கொமர்ஸின் தலைவர் ஜோர்க் வுட்கே. அவர் 1990 களில் இருந்து சீனாவில் வணிகம் செய்து வருகிறார். பல ஆண்டுகளாக கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்ட தலைவர்களுடனும் தொடர்பில் உள்ளார்.





ஜீரோ கோவிட் கொள்கை ஏற்படுத்திய பாதகங்கள் தற்போதும் வணிக நிறுவனங்கள் மற்றும் சாதாரண நுகர்வோர்களால் உணரப்படுகின்றன என்றும் வுட்கே கூறுகிறார்.

ஜீரோ-கோவிட் கால அதிர்ச்சியின் காரணமாக செலவினங்களைப் பற்றிய எச்சரிக்கை நிலவுகிறது என்று கூறும் அவர், "சீனாவில் கடந்த சில ஆண்டுகளாகவே மக்கள் அதிர்ச்சியில் உள்ளனர். ரிஸ்க் எடுப்பதற்கு அவர்கள் அஞ்சுகின்றனர். முடிவுகள் எடுக்கும்போது அவர்கள் மிக கவனமாக இருக்கிறார்கள். இந்த அதிர்ச்சி குறிப்பாக ஷாங்காயில் அதிகமாக உள்ளது. வெளிநாட்டு முதலீட்டை பொறுத்தவரை ஷாங்காயின் கவர்ச்சி கணிசமாக குறைந்துள்ளது," என்றார்.

எனினும் இந்த தவறுக்கு லி கியாங் மட்டுமே பொறுப்பல்ல என்று வுட்கே எண்ணுகிறார். பிற தொழிலதிபர்களின் கருத்தும் இதையே எதிரொலிக்கிறது.

டெஸ்லாவை ஷாங்காய்க்கு அழைத்து வந்த பெருமை லி கியாங்கிற்கு உண்டு. இது அமெரிக்காவிற்கு வெளியே அந்நிறுவனத்தின் முதல் தொழிற்சாலையாகும். மற்ற



வெளிநாட்டு கார் நிறுவனங்கள் செய்ததைப் போலவே சீனப் பங்குதாரருடன் கூட்டு சேரும் தேவையின்றி அதன் சொந்த தொழிற்சாலையை டெஸ்லா ஷாங்காயில் அமைத்தது.

2019 ஆம் ஆண்டில் ஷாங்காயின் முதல் சுதந்திர வர்த்தக மண்டலத்தின் நற்பண்புகள் குறித்து அவர் பேசுகையில், சர்வதேச போட்டித்தன்மைக்கு உகந்த பகுதியாக ஷாங்காய் மாறும் பொருளாதார உலகமயமாக்கலுடன் ஆழமாக ஒருங்கிணைக்க சீனாவிற்கு ஒரு முக்கிய ஆதரவாக செயல்படும்" என்று அவர் கூறினார்.

அவர் விதிகளை வளைக்கத் தயாராக இருக்கும் ஒரு தாராளவாத நபராக சில வட்டாரங்களில் பார்க்கப்படுகிறார்.

ஆயினும்கூட, அவர் தற்போது, விதியை வளைக்கும் அதிகாரம் படைத்தவராக இருப்பாரா, ஷி ஜின்பிங்கின் ஆதரவைக் கொண்டிருப்பதால் செய்ய வேண்டியதைச் செய்ய பயப்படாமல் இருப்பாரா அல்லது ஷி ஜின்பிங்கின் நிழலுக்குள்ளேயே இருப்பாரா என்பது தெளிவாக தெரியவில்லை.

2016 ஆம் ஆண்டில், அவர் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு பெயர் பெற்ற வளம் நிறைந்த கிழக்கு மாகாணமான ஜியாங்சுவிற்கான கட்சியின் செயலாளராக ஆனார். அலிபாபா நிறுவனத்தின் நிறுவனர் ஜேக் மா மற்றும் பிற நிர்வாகிகளை சந்தித்து அங்குள்ள வணிகத்திற்கான சூழல் குறித்தும் அவர் ஆலோசனை பெற முயன்றார்.

ஆனால், தற்போதைய சூழல் வேறு விதமாக உள்ளது. சமீபத்திய ஆண்டுகளில், தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்கள் சொந்த நலனுக்காக மிகவும் சக்திவாய்ந்தவையாக மாறிவிட்டன என்று நம்பி, அவற்றைக் கட்டுப்படுத்துமாறு அதிபர் ஷி ஜின்பிங் உத்தரவிட்டுள்ளார். இந்த நிறுவனங்களின் தலைவர்கள் 'காணாமல் போவது" வழக்க மாக இருந்து வருகிறது. இதில் சமீபத்தில் இணைந்தவர் பாவ் ஃபேன்.

கடந்த காலத்தில் லி கியாங் ஊக்குவித்த மாதிரியான விஷயமாக இது தெரியவில்லை, ஆனால் தற்போது அவரும் ஷி ஜின்பிங்கும் நீண்ட தொலைவிற்கு சென்றுவிட்டனர்.

லி ஜின்பின் ஜியாங்சுவில் இருப்பதற்கு முன்பு, ஷாங் காய்க்கு தெற்கே மற்றொரு வளம் நிறைந்த கிழக்கு மாகா ணமான ஜெஜியாங்கில் இருந்தார். அந்த நேரத்தில் மாகாணக் கட்சித் தலைவராக ஜி ஜின்பிங் இருந்தார், லி அவரது தலைமை அதிகாரியான பிறகு, இருவரும் இரவு வரை வேலை செய்து, தங்களது மேல் அதிகாரிகளை கவர்ந்தனர்.

ஆனால், தற்போது பதவியில் உள்ள லி காச்சியாங் உடன் ஷி ஜின்பிங் இப்படிப்பட்ட பிணைப்பை கொண்டது இல்லை.

அவர்கள் மிகவும் கூட்டுத் தலைமையுடன் ஒரு கால கட்டத்தில் ஒன்றாக உயர்ந்தனர். லி காச்சியாங் ஒரு விதத் தில் அவருக்கு போட்டியாளராக இருந்தார். அதிபர் பதவிக்கான வேட்பாளராகவும் லி காச்சியாங் கருதப்பட் டார். ஷி ஜின்பிங்கிற்கு பதிலாக அவர் வெற்றி பெற்றிருந் தால் சீனா இப்போது எப்படி இருந்திருக்கும் என்று நீங் கள் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது.

பீக்கிங் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் பட்டம் பெற்றவரான லி காச்சியாங், கம்யூனிஸ்ட் இளைஞர் அமைப்பில் இருந்து படிப்படியாக கட்சியில் உயரிய பதவிகளை அடைந்தார்.

அதிபர் பதவி கிடைக்காத நிலையில், ஷி ஜின்பிங்கின் கீழ் பிரதமராக அவர் கட்டுப்படுத்தப்பட்டார். சீனா முழுவதிலும் உள்ள நகரங்களில் தெருவோர மீண்டும் அறிமுகப்படுத்துவது பொருளாதாரத்துக்கு புத்துயிர் அளிக்கவும், உற்சாகமான சூழ்நிலையை உருவாக்கவும் உதவும் என்று பிரதமராக இருந்தபோது லி காச்சியாங் அறிவித்தார். எனினும் அவரது அழைப்பை ஏற்று மீண்டும் கடைகளை அமைக்க வந்தவர்களை போலீசார் வெளியேற்றினர்.

கடந்த ஆண்டு கட்சி கூட்டத்தின்போது ஷி ஜின்பிங்கின் உத்தரவின் பேரில் மேடையில் இருந்து முன்னாள் தலைவர் ஹூ ஜிண்டாவோ வெளியேற்றப்பட்டார். ஹூ ஜிண்டாவோ அழைத்துச் செல்லப்பட்டபோது, அவர் நட்பு ரீதியாக லி காச்சியாங் தோளில் தட்டினார். அவரும் திரும்பி தலை அசைத்தார். தற்போது, ஹூ ஜிண்டாவோவுடன் லி காச்சியாங் இணைந்திருப்பதை பார்க்க முடிகிறது.

வலுவான பொருளாதார சாதனைக்காக லி காச்சியாங் நினைவுகூரப்படுவார். ஆனால் அவரது பதவியின் இறுதிக் காலம் ஜீரோ கோவிட் நெருக்கடியில் சிக்கியது.

மிக மோசமான அந்த நேரத்தில், பொருளாதாரம் மிகப்பெரிய அழுத்தத்தில் இருப்பதாக கூறி, கட்டுப்பாடுகள் வளர்ச்சியை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுமாறு அதிகாரிகளிடம் லி காச்சியாங் கூறினார்.

ஆனால், பொருளாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என்ற அவரது உத்தரவை பின்பற்றுவதா அல்லது ஜீரோ கோவிட் உத்தரவுகளை கடுமையாக பின்பற்ற வேண்டும் என்ற அதிபர் ஷி ஜின்பிங்கின் உத்தரவுகளை பின்பற்றுவதா என்பது தொடர்பாக அதிகாரிகள் முடிவு எடுக்கும் சூழல் வந்தபோது, லி காச்சியாங்கின் உத்தரவுகள் பின்பற்றப்படவில்லை.

தற்போது தான் விரும்பிய வரிசையில் கட்சியை ஷி ஜின்பிங் கட்டமைத்துள்ளார். அவர் எதிர்கொள்ளும் ஒரே பிரச்சனை என்னவென்றால், அவரது நற்பெயர் பொதுமக்களிடம் அடிபட்டுள்ளது.

பரவலான எதிர்ப்புகளையடுத்து ஜீரோ கோவிட் கொள்கை அவசரமாக கைவிடப்பட்டது, இளைஞர்கள் மத்தியில் நிலவும் அதிக வேலையின்மை சூழல், தொழில்நுட்ப பாதிப்பு, சேவை துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்பு ஆகியவை அவருக்கு எதிராக உள்ளன.

மக்களிடம் இழப்பதற்கு எதுவுமே இல்லை என்ற பொருளாதார நெருக்கடி யான நேரத்தில் மாவோ இருந்தார். ஆனால், தற்போது நிலை அப்படி இல்லை. மக்க ளின் வாழ்வாதாரம் மேம்பட்டுள்ளது. ஆனால், தங்கள் குழந்தைகள் தங்களைவிட சிறந்த வாழ்க்கையை வாழமாட்டார்களோ என்று நடுத்தர வர்க்க பெற்றோர்கள் கவலைகொள்ள தொடங்கிவிட்டனர்.

இந்த ஆண்டு தேசிய மக்கள் காங்கி ரஸ், அதில் பதவி பெறப் போகிறவர்கள் ஆகியோர் குறித்து தற்போதைய பொருளாதார அதிகார மையம் எங்கு செல்கிறது என்பதைப் பார்க்க விரும்பு வோர் உன்னிப்பாகக் கவனிப்பார்கள்.

நாடு எல்லாத் துறைகளிலும் சிறப்பா கச் செயல்படவில்லை என்றால், அப்போதுதான் கடினமான கேள்விகள் எழத் தொடங்கும்.

●

# இலங்கையில் மீண்டும் அதிகரிக்கும் சுற்றுலாப் பயணிகள் வருகை!

# வளர்ச்சிக்கு உதவுமா?

ரஞ்சன் அருண் பிரசாத்

இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்கக்கூடிய சுற்றுலாத்துறை இன்று படிப்படியாக வளர்ச்சி அடைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

இந்த ஆண்டின் முதல் மாதம் தொடக்கம், லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் இலங்கையை நோக்கி பயணிக்க ஆரம்பித்துள்ளனர்.

இதன்படி, இந்த ஆண்டின் ஜனவரி மாதம் 102,545 சுற்றுலா பயணிகள் நாட்டிற்கு வருகைத் தந்ததுடன், கடந்த பெப்ரவரி மாதம் 107,639 சுற்றுலா பயணிகள் வருகைத் தந்துள்ளனர்.

இந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் 210,184 சுற்றுலா பயணிகள் நாட்டிற்கு வருகைத் தந்துள்ளனர்.

கடந்த ஆண்டில் மார்ச் மாதத்திற்கு மாத்திரமே ஒரு லட்சத்தை தாண்டிய சுற்றுலா பயணிகள் வருகைத் தந்திருந்தனர்.

இதன்படி, கடந்த ஆண்டு மார்ச் மாதம் இலங்கைக்கு 106,500 சுற்றுலா பயணிகள் வருகைத் தந்திருந்தார்கள்.

ஏனைய 11 மாதங்களிலும் ஒரு லட்சத்திற்கும் குறைவான சுற்றுலா பயணிகளே வருகைத் தந்திருந்ததாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகள் தெரிவிக்கின்றன.



### இலங்கையின் சுற்றுலாத்துறை எப்போது வீழ்ச்சி அடைய ஆரம்பித்தது?

இலங்கையின் சுற்றுலாத்துறையானது, யுத்தம் நிறைவடைந்த காலப் பகுதிக்கு பின்னர் முன்னேற்றம் அடைந்து வந்த நிலையில், 2019ம் ஆண்டு நடத்தப்பட்ட ஈஸ்டர் தாக்குதலில் பாரிய வீழ்ச்சியை நோக்கி நகர ஆரம்பித்தது.

குறிப்பாக 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு பின்னர் சுற்றுலாத்துறை வீழ்ச்சி அடைந்திருந்தது.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்ட ஈஸ்டர் தாக்குதல், இலங்கையின் சுற்றுலாத்துறையை பாரிய வீழ்ச்சி பாதைக்கு கொண்டு சென்றிருந்தது.

இவ்வாறான நிலையில், 2019ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்கு பின்னரான காலத்தில் இலங்கையின் சுற்றுலாத்துறை வளர்ச்சியை நோக்கி நகர்ந்து, நவம்பர் மாதமளவில் வழமைக்கு திரும்பியிருந்ததாக இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபை தெரிவிக்கின்றது.

2019ம் ஆண்டு மார்ச் மாதம் 244,328 சுற்றுலாப் பயணிகள் வருகைத் தந்த நிலையில், ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னராக மே மாதம் 37,802 சுற்றுலா பயணிகளாக குறைவடைந்திருந்தது.

இதையடுத்து, நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு, பாரிய சிரமத்திற்கு மத்தியில் 2019ம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கையின் சுற்றுலாத்துறை மீண்டும் வழமை நிலைமைக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த நிலையில், 2019ம் ஆண்டு இலங்கைக்கு வருகைத் தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 1,913,702 ஆக பதிவாகியிருந்தது.

2020ம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களிலும் 2 லட்சத்தை தாண்டிய சுற்றுலா பயணிகள் பதிவான நிலையில், மார்ச் மாதம் நாட்டில் முதலாவது கோவிட் தொற்றாளர் அடையாளம் காணப்பட்டார்.

இதையடுத்து, இலங்கையில் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு, விமான நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

இந்த நிலையில், 2020ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அந்த ஆண்டு நவம்பர் மாதம் வரை இலங்கைக்கு ஒரு சுற்றுலா பயணி கூட வருகைத்தரவில்லை என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவிக்கின்றது.

எவ்வாறாயினும், அந்த ஆண்டு டிசம்பர் மாதம் கோவிட் பரவலுக்கு மத்தியில் 393 சுற்றுலா பயணிகள் வருகைத் தந்திருந்தனர்.

2020ம் ஆண்டு இலங்கைக்கு மொத்தமாக 507,704 சுற்றுலா பயணிகள் வருகைத் தந்திருந்தனர்.

எனினும், 2021ம் ஆண்டு இலங்கையின் சுற்றுலாத்துறை பாரிய பின்னடைவை சந்தித்திருந்தது.

2021ம் ஆண்டு முழுவதும் 194,495 சுற்றுலா பயணிகள் மாத்திரமே வருகைத் தந்திருந்தனர்.

2022ம் ஆண்டு முழுவதும் 719,978 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைத் தந்திருந்தனர்.

இலங்கை பொருளாதார ரீதியில் பாரிய சவால்களை எதிர்நோக்கிய வருடமாக 2022ம் ஆண்டு வரலாற்றில் பதிவாகியுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு, மின்சார தடை, அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, வரிசைகளில் மக்கள் காத்திருத்தல் உள்ளிட்ட பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியில் கடந்த ஆண்டு குறிப்பிடத்தக்களவு சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைத் தந்திருந்தனர்.

இலங்கை ஆட்சியாளருக்கு எதிராக 2022ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் தேதி போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இதன்படி, மார்ச் மாதமே அதிகளவிலான பயணிகள் இறுதியாக பதிவாகியுள்ளனர்.



2022ம் ஆண்டு மார்ச் மாதம் 106,500 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைத் தந்ததை அடுத்து, 2023ம் ஆண்டு ஜனவரி மாதமே ஒரு லட்சத்தை தாண்டிய சுற்றுலாப் பயணகள் நாட்டிற்கு வருகை தந்தார்கள்.

2021ம் ஆண்டு அதிகபட்சமாக டிசம்பர் மாதம் 89,506 சுற்றுலாப் பயணிகளே வருகைத் தந்தனர்.

2020ம் ஆண்டு சுற்றுலாத்துறை ஊடாக இலங்கைக்கு 0.7 பில்லியன் அமெரிக்க டாலர் வருமானமும், 2021ம் ஆண்டு 506.9 மில்லியன் அமெரிக்க டாலர் வருமானமும், 2022ம் ஆண்டு 1.1 பில்லியன் அமெரிக்க டாலரும் வருமானமாக கிடைத்துள்ளது.

### சுற்றுலாத்துறையில் முன்னேறும் இலங்கை

கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு முதல் இரண்டு மாதங்களில் சுற்றுலாத்துறை முன்னேற்றமடைந்து வருவதை, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகளின் ஊடாக உறுதிப்படுத்தப்படுகின்றது.

முதல் இரண்டு மாதங்களிலும், 2 லட்சத்து 10 ஆயிரத்தை தாண்டிய சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைத் தந்துள்ளனர்.

இதன்படி, ரஷ்யாவிலிருந்தே ஜனவரி மாதம் அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைத் தந்ததுடன், அடுத்ததாக இந்தியாவிலிருந்தே அதிகளவிலானோர் வருகைத் தந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகளுக்கு அமைய, 1985ம் ஆண்டு முதலான தரவுகள் பதிவில் உள்ளன.

இதன்படி, 1985ம் ஆண்டு இலங்கைக்கு 257,456 சுற்றுலாப் பயணிகள் வருகைத் தந்துள்ளனர்.

1985ம் ஆண்டு முதல் 2011ம் ஆண்டு வரையான காலப் பகுதி வரை ஒரு மில்லியனுக்கும் குறைவான சுற்றுலாப் பயணிகளே வருகைத் தந்துள்ளனர்.

எனினும், 2012ம் ஆண்டு முதல் தடவையாக ஒரு மில்லியனை தாண்டிய சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைத் தந்தனர்.

இதன்படி, 2012ம் ஆண்டு 10 லட்சத்து 5 ஆயிரத்து 605 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைத் தந்தனர்.

இந்த தொகையானது படிப்படியாக அதிகரித்து, 2016ம் ஆண்டு அந்த தொகையானது 2 மில்லியனை எட்டியிருந்தது.

இதன்படி, 2016ம் ஆண்டு 20 லட்சத்து 50 ஆயிரத்து 832 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைத் தந்தனர்.

2016ம் ஆண்டு முதல் 2018ம் ஆண்டு வரை 2 மில்லியனை தாண்டிய சுற்றுலாப் பயணிகள் வருடாந்தம் நாட்டிற்கு வருகைத் தந்த போதிலும், 2019ம் ஆண்டு நடத்தப்பட்ட ஈஸ்டர் தாக்குதல் காரணமாக அந்த வருடம் 1.9 மில்லியன் சுற்றுலாப் பயணிகளே வருகைத் தந்தனர்.

2020ம் ஆண்டு சுற்றுலாத்துறையானது, மீண்டும் 2009ம் ஆண்டு நோக்கி பின்னடைவை சந்தித்தது.

இலங்கையில் இறுதிக் கட்ட யுத்தம் இடம்பெற்ற 2009ம் ஆண்டு 447,890 சுற்றுலாப் பயணிகள் வருகைத் தந்ததை போன்று, 2020ஆம் ஆண்டு 5 லட்சத்தை தாண்டிய சுற்றுலாப் பயணிகளே வருகைத் தந்தனர்.

இந்த பின்னடைவிலிருந்து நாடு தற்போது முன்னோக்கி நகர ஆரம்பித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

2019ம் ஆண்டு இறுதி முதல் உலகளாவிய ரீதியில் பரவிய கோவிட் பெருந்தொற்றை அடுத்து, சீன சுற்றுலாப் பயணிகள் வருகை தடைப்பட்டிருந்தது.

இந்த நிலையில், 3 வருடங்களின் பின்னர் முதல் தடவையாக சீன சுற்றுலாப் பயணிகள் குழுவொன்று கடந்த வாரம் நாட்டை வந்தடைந்தது.

120 சீன சுற்றுலாப் பயணிகளுடன், சிறிலங்கன் ஏர் லைன்ஸ் விமானம் நாட்டை வந்தடைந்தது.

அதேபோன்று, சீனா சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு அழைத்து வரும் நோக்குடன், ஏப்ரல் மாதம் முதல் இலங்கை மற்றும் சீனாவிற்கு இடையில் வாராந்தம் 9 விமான சேவைகளை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவிக்கின்றார்.

‘சீனாவின் சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு 3 வருடங்களின் பின்னர் இந்த வருடம் வருகைத் தருகின்றமை, இலங்கையின் சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கு மிக முக்கியமான காரணமாக அமையும் என நினைக்கின்றேன். பெருமளவலான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு எதிர்காலத்தில் வருகைத் தருவார்கள் என நம்புகின்றேன். அது நாட்டிற்கு பாரிய சக்தியாக அமையும். ஒரு வருடத்திற்குள் 5 லட்சம் சீன சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைத் தரும் போது, ஒரு சீன சுற்றுலாப் பயணி 5000 டாலரை எடுத்து வருவாராயின், அது சர்வதேச நாணய நிதியத்தினால் கடனாக வழங்கப்படும் தொகையுடன் ஒப்பிடப்படும். அதனால், இலங்கையை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு இது பங்களிப்பாக இருக்கும்” என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவிக்கின்றார்.

தற்போது காணப்படுகின்ற நிலைமை இவ்வாறே தொடருமாக இருந்தால், இலங்கை சுற்றுலாத்துறையின் ஊடாக பொருளாதார ஸ்திரதன்மையை நோக்கி நகரும் சாத்தியம் காணப்படுவதாக அரசாங்கம் நம்புகிறது. (பிபிசி)

# உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக பஸில் தலைமையில் கூடுகிறது பெரமுன

கொழும்பு, மார்ச் 07

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சிறீ லங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெறும். தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை விசேட பேச்சு நடைபெறவுள்ளது என சிறீ லங்கா பொதுஜன பெர முனவின் ஊடகப்பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமன்ன தெரிவித்தார்.



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வினவியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொதுஜன பெரமுன பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிடுவது அடிப்படையற்றதாகும். ஏனைய அரசியல் கட்சிகளை காட்டிலும் தேர்தல் நடவடிக்கைகளை நாங்களே முன்னெடுத்தோம். முதலாவது தேர்தல் பிரசார கூட்டத்தை அநுராதபுரத்தில் நடத்த தீர்மானித்திருந்தோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளை தேர்தல்கள் ஆணைக்குழு இடைநிறுத்தியதை தொடர்ந்து தேர்தல் பிரசார நடவடிக்கைகளை இடைநிறுத்தினோம். உயர்நீதிமன்றத்தின் இடைக்கால தடையுத்தரவை தொடர்ந்து தேர்தல் பணிகளை ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.

உள்ளூாராட்சி மன்றத் தேர்தல் பணிகளை முன்னெடுப்பது தொடர்பில் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் தலைமையில் விசேட பேச்சு நாளை (இன்று) பொதுஜன பெரமுனவின் தலைமை பணிமனையில் நடைபெறவுள்ளது. அநுராதபுர நகரில் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தை நடத்த எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (ஐ)

# அந்நிய செலாவணிக்கு தட்டுப்பாடு இல்லை!

## மத்திய வங்கி ஆளுநர்

கொழும்பு, மார்ச் 07

நாட்டில் அத்தியாவசிய பொருட்களுக்கான அந்நிய செலாவணிக்கு தற்போது தட்டுப்பாடு இல்லையென இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமையில், அத்தியாவசியப் பொருட்களுக்கு அந்நிய செலாவணி தட்டுப்பாடு இல்லை. எண்ணெய், எரிவாயு, நிலக்கரி, அத்தியாவசிய மருந்துகள் என அனைத்துப் பொருட்களுக்கும் தேவையான அந்நிய செலாவணியை தற்போது மத்திய வங்கி வழங்குவதில்லை - என்றார்.

வங்கி முறை மூலமாகவே தற்போது வழங்கப்படுகின்றது மற்றும் அதன் வைப்புத் தொகை இப்போது சுமார் 600 மில்லியன் டொலர்களாக அதி கரித்துள்ளது. தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே செல்லும் என்றும் அவர் கூறினார்.

# நியூசிலாந்து உயர்ஸ்தானிகருடன் எதிர்க்கட்சித் தலைவர் சந்திப்பு!

கொழும்பு, மார்ச் 07

இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நியூசிலாந்து உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கல் அப்பிளுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு, கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போதே அவர் மேற்படி கோரிக்கையை முன்வைத்தார். இலங்கையில் வறுமையை ஒழிக்க நியூசிலாந்து அரசாங்கத்தின் ஆதரவை எதிர்க்கட்சித் தலைவர் கோரினார்.

அத்துடன், நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையின் முக்கியத்துவம் குறித்தும் இதன்போது சுட்டிக்காட்டினார்.

மேலும் இலங்கை மற்றும் நியூசிலாந்துக்கு இடையிலான பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்கள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது. (ஐ)

# செவித்திறன் குறைபாட்டை நிவர்த்தி செய்ய வாய்ப்பு!

## மருத்துவர் அறிவுறுத்து

கொழும்பு, மார்ச் 07

ஆறு மாதத்துக்குள் குழந்தைகளின் செவித்திறன் குறைபாட்டை பெற்றோர்கள் அடையாளம் காணமுடிந்தால் சிகிச்சை மற்றும் குணப்படுத்துவதற்கான நிகழ்தகவு அதிகம் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த கொழும்பு தேசிய மருத்துவமனையின் சத்திர சிகிச்சை நிபுணர் ரவீந்திர கிரிஹேன, இரண்டு வகையான செவித்திறன் குறைபாடுகள் உள்ளன என்று தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்படி தகவலை மருத்துவர் வெளியிட்டார். (ஐ)

## மீன்பிடிக்க சென்றவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 07

புத்தளம், ஆனமடுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரியகுளம் வாவியில் மீன்பிடிக்க சென்ற நபரொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்று ஆனமடுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெரியகுளம் ஆனமடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

கல்வி tv CHANNEL-1

**07.03.2023**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**07.03.2023**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மயிலந்தனைமடுவை சிங்களமயப்படுத்தும் மாதுறு ஓயா திட்டத்தை நிறுத்தவேண்டும்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எச்சரிக்கை

மட்டக்களப்பு, மார்ச் 07

**மட்டக்களப்பு-பொலனறுவை எல்லைப் பகுதியான தமிழ் மக்களுக்கு சொந்தமான மயிலந்தனைமடு மேச்சல்தரை பகுதியில் சிங்கள மயப்படுத்தலுக்காக திட்டமிடப்பட்ட மாதுறு ஓயா வலதுகரை திட்டத்திற்கு தமிழ் பிரதேசத்தின் ஓர் அங்குலம் நிலம் கூட வழங்க முடியாது. நிதி உதவி வழங்குகின்ற சர்வதேச நிறுவனங்கள் இதனை நிறுத்த வேண்டும் அல்லது உங்கள் அலுவலகங்களுக்கு முன்னால் போராட்டம் எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பொன்னம் பலம் கஜேந்திரகுமார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் மற்றும் கட்சி ஆதரவாளர்களுடன் மயிலந்தனை மேச்சல் தரை பகுதிக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை விஜயம் மேற்கொண்டு பண்ணையாளர்களை சந்தித்து அவர்களின் பிரச்னைகளை கேட்டறிந்தனர்.

இதன் பின்னர் அவர் மேலும் தெரிவிக்கையில்- மட்டக்களப்பு - பொலனறுவை எல்லைப் பிரதேசமான மயிலந்தனைமடு பெரிய மாதந்தனை பிரதேசத்தில் மேச்சல்தரை பகுதியில் கால்நடை பண்ணையாளர்களை அச்சுறுத்தி மாடுகளை வெட்டி அவர் களை பரம்பரையான மேச்சல்தரையில் இருந்து ஓட வைப்பதற்காக முழுமூச்சிலான திட்டம் கடந்த இரண்டு வாரத்தில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

பண்ணையாளர்களின் இந்த பிரச்னைகளை அவர்கள் பல இடங்களில் முறையிட்டனர். ஆனால் எந்த ஒரு இடத்திலும் அவர்களுக்கு முடிவு இல்லா மல் தொடர்ச்சியாக அவர்களின் வாழ்வே கேள்விக் குறியாகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

மாதுறு ஓயா வலதுகரையை சிங்களமயமாக்குதலுக்கான நோக்கத்தோடு இந்த பண்ணையாளருக்கு எதிராக நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்பது நன்றாக விளங்குகின்றது.

இதேவேளை கிழக்கு மாகாண ஆளுநர், வனவள திணைக்களம், மகாவலி அபிவிருத்தி சபை போன்ற அனைத்து கட்டமைப்புக்களும் இங்குள்ள மேச்சல் தரை காணிகளை அபகிப்பதற்கான நடவடிக் கையை உறுதியாக இருக்கின்றனர்.

எனவே தமிழ்ப் பிரதேசத்தை இன சுத்திகரிப்பு நடத்துவதற்கும் சிங்களக் குடியேற்றத்தை நடத்தி இங்குள்ள மக்களைப் பட்டினியில் சாவடிக்கின்ற நடவடிக்கையான மாதுறு ஓயா அபிவிருத்திக்கு நிதி உதவி வழங்கும் சர்வதேச நிறுவனங்களே நீங்களும் தமிழ் இன சுத்திகரிப்புக்கு உடந்தையாக இருக்கின் றீர்கள்.

எனவே உங்களுக்கு இருக்கின்ற நிதியை எந்தவிதமான நிபந்தனையும் போடாமல் சிங்கள இனவாத சித்தாந்தத்திற்கு விலை போகின்றதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படுகின்றது என தெரிந்துவைத்திருக்க வேண்டும். இதை தடுத்து நிறுத்த முன்வர வேண்டும் அல்லது உங்கள் அலுவலகங்களுக்கு முன்னால் நாங்கள் போராட்டங்களை செய்வதை தவிர வேறு வழியில்லை.

கோட்டாபய காலத்தில் சந்தித்து இந்த விடயங்களை கூறி பாராளுமன்றத்தில் பெரிதுபடுத்தி பேசியபோது தற்காலிகமாக நிறுத்துவதாக உத்தரவாதம் தந்தாலும் கூட இன்று முன்னரை விட தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இன்று ரணில் விக்கிரமசிங்க செல்லப்பிள்ளையாக நீங்கள் கருதி காப்பாற்றுகின்ற வேளையில் அவரின் ஆட்சி காலத்தில் இந்த இனவாத தமிழ்விரோதச் செயற்பாடுகள் அனைத்தும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்பது இன்று யதார்த்தம்.

எனவே நிதி உதவி செய்யும் சர்வதேச நிறுவனங்கள் உடனடியாக கொடுக்கக்கூடிய நிதி உதவிகளை நிபந்தனைகளை போட்டு இங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துகின்றதை செய்யவேண்டும்.

இந்த திட்டம் மக்களுக்குரிய அபிவிருத்தி வேலைத்திட்டமாக இருக்கவேண்டுமே தவிர இந்த மக்களை அப்புறப்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தை இல்லாமல் செய்து ஒரு இன அழிப்புக்கு வழிவகைக்கின்ற முறையில் அமையக்கூடாது. இதையும் அம்பலப்படுத்துவோம். எனவே இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு சரியான வகையில் இங்கே பரம்பரையாக இருக்கக் கூடிய தமிழர் தாயத்தில் இருக்கக்கூடிய உண்மையான சொந்தக்காரர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்-என்றார். (அ)

# களுவாஞ்சிக்குடி வைத்தியசாலைக்கு தங்க விருது வழங்கப்பட்டு கௌரவம்

மட்டக்களப்பு, மார்ச் 07

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்குத் தங்க விருது வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் நாடளாவிய ரீதியில் இலங்கை தரமுகாமைத்துவ நிறுவனத்தால் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 69 நிறுவனங்களிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம் 400 இற்கும் மேற்பட்ட குழுக்களுக்கிடையே போட்டி நடத்தப்பட்டு வழங்கப்பட்ட விருது வழங்கும் விழாவில் மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்குத் தங்க விருது வழங்கப்பட்டது.

இதன்போது களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் திட்டமிடல் மற்றும் தரமுகாமைத்துவ பிரிவு வைத்தியரும், களுதாவளை ஆரம்ப மருத்துவச் சிகிச்சைப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரியுமான குகதாசன் மயூரேஷன் தலைமையிலான குழுவில் தாதிய பரிபாலகர் சுகிர்தராணி ஜெயரட்ணம், தொற்று நோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் பொறுப்பு தாதி உத்தியோகஸ்தர் சுதர்ஜினி ஜீவன் மற்றும் தரமுகாமைத்துவ பரிவு பொறுப்பு தாதி உத்தியோகஸ்தர் தனுசா பிரசாந் மற்றும் சிற்றூழியர் மேற்பார்வையாளர் ஜெயசீலன் கிரிதரன் ஆகியோர் மேற்படி வைத்தியசாலை சார்பாகக் கலந்து கொண்டு தங்க விருதைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.




(அ)

# கல்முனை காதி நீதிமன்ற நீதிபதியாக சட்டத்தரணி அன்ஸார் மௌலானா

அம்பாறை, மார்ச் 07



கல்முனை காதி நீதிமன்ற நீதிபதியாக சிரேஷ்ட சட்டத்தரணியும்,அகில இலங்கை சமாதான நீதிபதியும், உத்தியோகப்பற்றற்ற நீதவானுமான மருதமுனையைச் சேர்ந்த பளீல் மௌலானா அமீருல் அன்சார் மௌலானா கடந்த முதலாம் திகதியில் இருந்து செயற்படும் வண்ணம் இலங்கை நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அன்சார் மௌலானா பேராதனை பல்கலைக்கழக பொதுப் பட்டதாரியும் இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டமானியும் ஆவார்.

இவர் இலங்கை அதிபர் சேவை முதலாம் தரத்தில் சேவையாற்றி ஓய்வு பெற்றவர். (அ)

# ஆழ்கடலில் மூழ்கிய படகு மீட்பு!

அம்பாறை, மார்ச் 07

ஆழ்கடலில் மூழ்கிக் கொண்டிருந்த பாரிய படகு ஒன்று கடற்படை உதவியுடன் மீட்கப்பட்டது.

இச்சம்பவம் காரைதீவில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

காரைதீவுக்கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு ஆழ்கடல் படகு கடந்த வியாழக்கிழமை அதிகாலை விபத்துக்குள்ளானது.

காரைதீவைச் சேர்ந்த எஸ் .கிருஷ்ணமூர்த்தி என்பவரின் பாரிய படகே இவ்விதம் கடலில் சேதத்திற்குள்ளாகியது.

சேதம் எதனால் ஏற்பட்டது என்பது தொடர்பாக இன்னும் தெரியவில்லை.

விபத்துக்குள்ளான பாரிய படகு வலைகளோடு கடலுக்குள் மூழ்கிய வண்ணம் இருந்தது.

முதலில் அன்றையதினம் பல சிரமங்களின் மத்தியில் வலைகள் கரைக்கு கொண்டு வரப்பட்டன.

பின்னர் நேற்று முன்தினம் மூழ்கிக் கொண்டிருந்த பாரிய படகை படகு உரிமையாளர் மற்றும் அவரது குழுவினர் காரைதீவு கடற்படையினருடன் இணைந்து ஆழ்கடலுக்குச் சென்று பலத்த பிரயத்தனங்களை மேற்கொண்டு மீட்டனர்.

படகு பாரிய சேதத்திற்குள்ளாகி இருந்தது. (அ)

# மாணவிக்கு மடிக்கணினி

அம்பாறை, மார்ச் 07

நாவிதன்வெளி மத்திய முகாம் பிரதேசத்தில் உள்ள வறிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கு நளீர் பௌண்டேசன் அமைப்பினால் மடிக்கணினி ஒன்று நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

நளீர் பவுண்டேசன் அமைப்பினரிடம் வறிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவி கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள தனக்கு மடிக்கணினி அத்தியாவசிய தேவையாக உள்ளது எனக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நளீர் பவுண்டேசன் அமைப்பினால் சுமார் 160,000 ரூபா பெறுமதியான மடிக்கணினி மற்றும் ஏனைய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு அனைத்து பொருட்களையும் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் குறித்த மாணவியின் பெற்றோரிடம் வழங்கினார்.

இந்நிகழ்வில் நளீர் பவுண்டேசன் அமைப்பின் ஸ்தாபக தலைவரும், இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண பணிப்பாளருமான ஏ.நளீர், அமைப்பின் உபதலைவர் கே.எம்நௌபர், மத்திய முகாம் பெரிய பள்ளிவாசல் தலைவர் எம்.சி.பயாஸ் மற்றும் பொருளாளர் எம்.எஸ்.எம். இக்பால் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# வெல்லாவெளி பீலியாறு மக்களின் மின்சார கோரிக்கைக்கு உடன் தீர்வு

## கோ.கருணாகரம் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 07

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப்பற்று வெல்லாவெளி பீலியாறு கிராமத்தில் நீண்ட நாளாக மின்சாரத்துடன் கவனிப்பாரின்றி நிலத்தில் கிடந்த மின்சார வயர்கள் வெல்லாவெளி பீலியாறு மக்களின் கோரிக்கைக்கு அமைவாக சீர் திருத்தம் செய்யப்பட்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரத்தின் (ஜனா) கோரிக்கைக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்ட மின்சாரசபை பொறியியளாளர் வரதனின் துரித நடவடிக்கையின் கீழ் நேற்று முன் தினம் களுவாஞ்சிகுடி மின்சார சபையினால் நிலத்தில் நீண்ட நாளாக கிடந்த மின்சார வயர்கள் சீர் செய்யப்பட்டன. (அ)



ஆலங்கேணி விநாயகர் ஆலய தீர்த்த உற்சவம் நேற்று நடைபெற்றத்து. இதன்போது சுவாமி வீதி வலம் வந்து தீர்த்தக்கரைக்கு செல்வதை காணலாம். (அ-04)

## இம்ரான் கானை கைது செய்ய முயற்சி!



இஸ்லாமாபாத், மார்ச் 07
பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானை கைது செய்ய அந்நாட்டு காவல்துறையினர் முயற்சித்துள்ளனர்.

நீதிமன்ற உத்தரவுக்கமைய, லாகூரில் உள்ள இம்ரான் கானின் வீட்டுக்கு அவரை கைது செய்ய சென்றபோது, அவர் அங்கு இருக்கவில்லை என இஸ்லாமாபாத் காவல்துறையினர் அறிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் தேர்தல்கள் ஆணையகத்தினால் அண்மையில் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிராக முறைப்பாடளிக்கப்பட்டு, வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இம்ரான் கானை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

எனினும், இம்ரான் கான் முன்னிலையாகாத நிலையில் அவரை கைது செய்யுமாறு நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, காவல்துறையினரால் இம்ரான் கானை கைது செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ)

# ரோஹிங்கியா அகதிகளின் முகாமில் பாரிய தீவிபத்து!

## 2,000 தங்குமிடங்கள் தீக்கிரை



**டாக்கா, மார்ச் 07**
**பங்களாதேஷின் தென்கிழக்கு பகுதியில் உள்ள ரோஹிங்கியா அகதிகள் முகாமில் பாரிய தீவிபத்து ஏற்பட்டதையடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் தங்குமிடமின்றி தவித்து வருகின்றனர்.**

காக்ஸ் பஜார் என்று அழைக்கப்படும் முகாமில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை பரவிய தீ, முகாமில் சுமார் 2,000 தங்குமிடங்களை அழித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் நேரப்படி சுமார் 14:45 மணிக்கு தீ பரவத் தொடங்கியது. எனினும், தீ விபத்திற்கான காரணம் இதுவரை தெரியவில்லை. உயிர் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

அண்டை நாடான மியன்மாரில் வன்முறையில் இருந்து தப்பிய 12,000பேர் இப்போது வீடற்றவர்களாக உள்ளதாக, பங்களாதேஷின் அகதிகள் ஆணையர் மிஜனூர் ரஹ்மான் தெரிவித்தார்.

மூன்று மணி நேரத்திற்குள் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது, ஆனால் குறைந்தது 35 மசூதிகள் மற்றும் அகதிகளுக்கான 21 கற்றல் மையங்களும் அழிக்கப்பட்டுள்ளன. குடிதண்ணீர் மையங்கள், பரிசோதனை வசதிகள் போன்ற அடிப்படைச் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. (அ)

# செஞ்சிலுவை சேவையாளர் வடக்கு மாலியில் கடத்தல்!

பமாகோ, மார்ச் 07
வடக்கு மாலி பிரதேசத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை சேர்ந்த இரு சேவையாளர்கள் கடத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாலியில் பாதிப்படையும் மக்களுக்கு தங்களது தரப்பினர் பக்கசார்பின்றி சேவையினை மேற்கொண்டுள்ள நிலையில், மனிதாபிமானமற்ற முறையில் இந்த கடத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவை சங்கம் தெரிவித்துள்ளது.

அவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு முதல் மாலியின் வடக்கு பகுதியில் பிரிவினை கோரி போராடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அல்-கெய்டாவுடன் இணைந்து செயல்படும் ஜிஹாட் ஆயுத குழுவும் இஸ்லாமிய ஆயுத குழுவும் தமது நடவடிக்கைகளை மாலியின் மத்திய பகுதியிலும் அண்டை நாடுகளான நைகர் மற்றும் புர்கினா பாசோவிலும் விஸ்தரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு முதல் ஆயிரக்கணக்கான பொது மக்கள், காவல்துறையினர் மற்றும் இராணுவ தரப்பினர் கொல்லப்பட்டுள்ளதுடன், 20 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர். (அ)

# கிரேக்க ரயில் விபத்து:

## உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரிடம் பகிரங்க மன்னிப்பு கோரினார் பிரதமர்!

எதென்ஸ், மார்ச் 07
கிரேக்கத்தை உலுக்கிய ரயில் விபத்தில் உயிரிழந்த 57 பேரின் குடும்பத்தினரிடம், கிரேக்க பிரதமர் கிரியாகோஸ் மிட்சோடாகிஸ் மன்னிப்பு கேட்டுள்ளார்.

பல நாட்களாக போராட்டங்கள் தொடர்ந்தநிலையில் அவரது இந்த மன்னிப்பு வந்துள்ளது.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை தலைநகர் எதென்ஸில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டபோது பொலிஸாருடன் மோதல்கள் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தில் 12,000 பேர் கலந்துகொண்டதாக பொலிஸ்துறை மதிப்பிட்டுள்ளது. இதன்போது, ஏழு அதிகாரிகள் காயமடைந்ததாகவும், ஐந்து பேர் கைது செய்யப்பட்டதாகவும் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சில ஆர்ப்பாட்டக்காரர்கள் குப்பைத் தொட்டிகளுக்கு தீ வைத்தனர் மற்றும் பெற்றோல் குண்டுகளை வீசினர். பதிலுக்கு பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் ஸ்டன் கையெறி குண்டுகளை வீசினர்.

போராட்டக்காரர்கள் இறந்தவர்களின் நினைவாக நூற்றுக்கணக்கான கருப்பு பலூன்களை வானத்தில் பறக்கவிட்டதாகவும், சிலர் 'கொலையாளி அரசாங்கங்கள் ஒழிக' என்ற பதாதைகளை வைத்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி இரவு எதிரெதிர் திசையில் பயணித்த ஒரு பயணிகள் ரயிலும், சரக்கு ரயிலும் விபத்துக்குள்ளானதில் 57பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இரகசிய காதலிக்காக புடின் கட்டியுள்ள காதல் மாளிகை!



மொஸ்கோ, மார்ச் 07
ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தற்போது தனது காதலியும் முன்னாள் ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்றவருமான அலினா கபேவாவுடன் மொஸ்கோவில் வசித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மொஸ்கோவில் இருந்து வடமேற்கே 400 கி.மீ. தொலைவில் உள்ள வால்டாய் ஏரியில் உள்ள புடின் தோட்டத்தில் உள்ள வில்லாவில் கபேவாவுடன் புடின் வசித்து வந்ததாக கூறப்படுகிறது.

ரஷ்ய புலனாய்வு செய்தி வலைத்தளமான தி ப்ராஜெக்ட் இதனை தெரிவித்துள்ளது.

சர்வதேச ஊடகங்களில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினைப் பற்றிய பல செய்திகள் அடிக்கடி வெளியாவதுண்டு. நாம் பார்ப்பது நிஜப் புடினே இல்லை பாதுகாப்புக் காரணங்களுக்காக அவரைப் போலவே இருக்கும் வேறொருவரை, பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வைக்கிறார்கள், புடின் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது அவருக்கு இருக்கும் நோய்களைப் பற்றி யாருக்கும் தெரிந்துவிடக்கூடாது என்று அவரது இயற்கை உபாதைக் கழிவுகளைக்கூடப் பெட்டியில் அடைத்து ரஷ்யாவுக்கு எடுத்துச் சென்றுவிடுவார்கள் என ரஷ்ய ஜனாதிபதி புடின் குறித்த ஏராளமான கிசுகிசு தகவல்கள் இணையத்தில் கொட்டிக்கிடக்கின்றன. அந்த வரிசையில், தற்போது மற்றொரு தகவல் வெளியாகியுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி புடினும், ஜிம்னாஸ்ரிக் வீராங்கனை அலினா கபேவாவும் காதலித்து வருகிறார்கள். அவர்களுக்குக் குழந்தைகள்கூட இருக்கின்றனர் என்ற செய்தி நீண்டகாலமாகச் சொல்லப்பட்டுவருகிறது.

2008, ஏப்ரல் மாதத்தில் முதன்முதலாக, மாஸ்கோஸ்வ்ஸ்கி கரெஸ்பாண்டென்ட் என்ற நாளிதழ், 'புடினுக்கும் அலினாவுக்கும் நிச்சயதார்த்தம் முடிந்துவிட்டது' என்று செய்தி வெளியிட்டது. பின்னர், அந்தச் செய்திக்கு மறுப்பு வெளியிடப்பட்டதோடு, அந்த நாளிதழ் நிறுவனமும் மூடப்பட்டது. இதையடுத்து, 2013ஆம் ஆண்டில் 'புடினின் குழந்தைக்குத் தாயாகிவிட்டார் அலினா' என்றும், 2015ஆல் ஆண்டில், 'சுவிட்சர்லாந்தி லுள்ள மருத்துவமனையில் ஒரு பெண் குழந்தையையும், 2019 ஆல் மொஸ்கோவிலுள்ள மருத்துவமனையில் இரட்டை ஆண் குழந்தைகளையும் அலினா பெற்றுக்கொண்டார். அவர்கள் ரஷ்ய ஜனாதிபதி புடினுக்குப் பிறந்த குழந்தைகளே' என்றும் செய்திகள் கசிந்து பரபரப்பைக் கிளப்பின.

இந்த நிலையில், ரஷ்யாவில் தடை செய்யப்பட்ட புலனாய்வுச் செய்தி நிறுவனமான த புராஜெக்ட் சமீபத்தில் வெளியிட்டிருக்கும் செய்தியில், 'ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவிலிருந்து சுமார் 402 கி.மீ தொலைவில் அமைந்திருக்கும் வால்டாய் ஏரிக்கு அருகே, தனது காதலி அலினாவுக்கு ஒரு வசந்த மாளிகையைக் கட்டியிருக்கிறார் புடின். 13,000 சதுரஅடியில் கட்டப்பட்டிருக்கும் அந்த மாளிகையின் மொத்த மதிப்பு 120 மில்லியன் அமெரிக்க டொலர். 2021இல் கட்டி முடிக்கப்பட்ட அந்த மாளிகையில் அலினா, அவரின் குழந்தைகள் உள்ளிட்டவர்கள் வசித்து வருகின்றனர்' என்று தெரிவித்திருக்கிறது.

யார் இந்த அலினா? 39 வயதாகும் அலினா, உஸ்பெகிஸ்தான் நாட்டில் பிறந்தவர். ரஷ்யாவுக்காக ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொண்ட ரிதமிக் ஜிம்னாஸ்டிக் வீராங்கனை. அவர் 2 ஒலிம்பிக் பதக்கங்கள், 14 உலக சாம்பியன்ஷிப் பதக்கங்கள் மற்றும் 21 ஐரோப்பிய சாம்பியன்ஷிப் பதக்கங்கள் போன்ற பல விருதுகளை வென்றுள்ளார்.

அலினாவின் குடும்பம் உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்டில் இருந்து வந்தது. அவரது தந்தை மராட் கபாயேவ் ஒரு தொழில்முறை கால்பந்து வீரர். அவரது தங்கையான லெய்சன் கபேவா 2016 ஆம் ஆண்டு புடினால் டாடர்ஸ்தானில் உள்ள அல்மெட்யெவ்ஸ்க் நகர நீதிமன்றத்தின் நீதிபதியாக நியமிக்கப்பட்டார். அலினாவின் தொழில் வாழ்க்கையின் காரணமாக அவரது குடும்பத்தினர் அடிக்கடி உஸ்பெகிஸ்தான், கஜகஸ்தான் மற்றும் ரஷ்யாவில் பல்வேறு இடங்களுக்குச் சென்றனர்.

2014ஆம் ஆண்டு, ரஷ்யாவின் தேசிய ஊடகக்குழுவின் இயக்குநர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டார். 'எந்த அனுபவமும் இல்லாத ஒருவர் ஊடகக் குழு இயக்குநராக நியமிக்கப்பட்டதன் பின்னணியில் புடின் இருக்கிறார்' என அப்போதே புகார்கள் எழுந்தன. புடினுக்கு எதிராகத் தொடர்ந்து செயல்பட்டுவந்ததால் சிறையிலடைக்கப்பட்ட ரஷ்யாவின் எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நாவல்னி, 'ரஷ்யாவின் வளர்ச்சிக்காக ஒதுக்கப்படும் பட்ஜெட் தொகையை, அலினாவுக்குச் சொத்துகள் வாங்கத்தான் பயன்படுத்துகிறார் புடின்' என்று 2021ஆம் ஆண்டிலேயே குற்றம் சாட்டினார்.

புடின் மீது வைக்கப்படும் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கும், ஹூஇது அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளின் கட்டுக்கதை' என்பதே ரஷ்யாவின் வழக்கமான பதிலாக இருந்திருக்கிறது. ஹஅலினா விவகாரத்திலும் இதே பதில் தான் கடைப்பிடிக்கப்படுகிறது' என்கிறார்கள் சர்வதேச அரசியல் பார்வையாளர்கள். (அ)

## மகளிர் பிறீமியர் லீக்:

# பெங்களூரை 60 ஓட்டங்களால் வென்றது டில்லி கப்பிட்டல்ஸ்!



மும்பை, மார்ச் 07

மகளிர் பிறீமியர் லீக் (டபிள்யூ. பி. எல்.) இருபது - 20 தொடரில் டில்லி கப்பிட்டல்ஸ் அணி 60 ஓட்டங்களால் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியை வெற்றி கொண்டது.

நேற்று முன்தினம் நடந்த போட்டியில், முதலில் விளையாடிய டில்லி மகளிர் அணி 20 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 223 ஓட்டங்களைக் குவித்தது. டில்லி அணியின் தலைவியான மெக் லேனிங் 43 பந்துகளில் 72 ஓட்டங்களை அதிரடியாகக் குவித்தார். இதில் 14 பௌண்ட்ரிகள் அடங்கும்.

மற்றொரு தொடக்க வீராங்கனையான ஷபாலி வர்மா 45 பந்துகளில் 84 ஓட்டங்களை விளாசினார். இதில் 10 பௌண்ட்ரிகளும், 4 சிக்ஸர்களும் அடங்கும்.


மரிஜான் காப் 39 ஓட்டங்களும், றொட்ரிக்ஸ் 22 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். பெங்களூர் அணி தரப்பில் ஹீத்தர் நைட் 2 விக்கெட்களைச் சாய்த்தார்.

பின்னர் 224 ஓட்டங்கள் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய பெங்களூார் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 163 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதையடுத்து 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டில்லி அணி வெற்றி பெற்றது.

பெங்களூர் அணி சார்பில் அணித்தலைவி ஸ்மிருதி மந்தனா அதிகபட்சமாக 35 ஓட்டங்கள் சேர்த்தார். எலிஸ் பெர்ரி 31, ஹீத்தர் நைட் 34, மேகன் ஷூட் 30 ஓட்டங்கள் எடுத்தனர். மற்றவர்கள் சோபிக்காததால் பெங்களூர் அணி தோல்வி கண்டது.

டில்லி அணி தரப்பில் தாரா நோரிஸ் அபாரமாக பந்துவீசி 29 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக் கொடுத்து 5 விக்கெட்களைச் சாய்த்தார்.

அலிஸ் கேப்சி 2 விக்கெட்களையும், ஷிகா பாண்டே ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். தாரா நோரிஸ் ஆட்ட நாயகியாக தெரிவானார். (ஐ)



# இந்தியன் வெல்ஸ் ஓப்பன் ஜோகோவிச் விலகினார்!

கலிபோர்னியா, மார்ச் 07


இந்தியன் வெல்ஸ் மாஸ்டர்ஸ் போட்டியிலிருந்து உலகின் முதல் நிலை வீரரான நோவக் ஜோகோவிச் விலகியுள்ளார். கொரோனா தடுப்பூசியை அவர் பெறாததால் அமெரிக்காவுக்குள் நுழைய முடியாதது என்பதாலேயே இந்தப் போட்டயிலிருந்து விலகியுள்ளார்.

ஜோகோவிச் 22 முறை கிராண்ட்ஸ்லம் சம்பியன் பட்டங்களை வென்றவர். இவர் கோவிட் தொற்று தடுப்பூசியைப் பெறவில்லை.

அமெரிக்காவுக்குள் நுழைபவர்கள் கோவிட் தடுப்பூசியை பெற்றிருக்க வேண்டும். எதிர்வரும் ஏப்ரல் 10ஆம் திகதி வரை இந்த நிலை நீடிக்கும்.

இவ்வாறான சூழலாலேயே கடந்த ஆண்டு அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரை ஜோகோவிச் தவறவிட்டார். இந்நிலையில், கிராண்ட்ஸ்லம் போட்டிகளுக்கு அடுத்து முக்கியத்துவம் பெற்ற தொடரான இந்தியன் வெல்ஸ் தொடரை ஜோகோவிச் தவறவிட்டுள்ளார்.

இந்தியன் வெல்ஸ் ஓப்பன் தொடர் நேற்று ஆரம்பமானது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# ஆஸிக்கு எதிரான டெஸ்ட் முகமது ஷிமி பங்கேற்பார்

அஹமதாபாத், மார்ச் 07

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் 2 டெஸ்ட் போட்டியில் ஆடிய இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி 3ஆவது டெஸ்ட் போட்டியில் ஆடவில்லை.

அவருக்கு ஓய்வு அளிக்கப்பட்டதால் உமேஷ் யாதவ் களம் இறங்கினார். இந்நிலையில், அஹமதாபாத்தில் வருகிற 9ஆம் திகதி தொடங்கும் 4ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் முகமது ஷமி ஆடுவார் என்று இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்தூர் ஆடுகளம் சர்ச்சையில் சிக்கியதால் அஹமதாபாத் ஆடுகளத்தை எந்த மாதிரி தயாரிக்க வேண்டும் என்று இந்திய அணி நிர்வாகம் எதுவும் தெரிவிக்கவில்லை என்றும் வழக்கம் போல ஆடுகளம் தயார் செய்யப்படும் என்றும் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

இதனிடையே இந்தூரில் நடந்த இந்தியா-அவுஸ்திரேலியா அணிகள் இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி 3 நாட்களுக்குள் முடிவுக்கு வந்ததால் இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா மும்பை திரும்பி இருக்கிறார்.

# இறுதி டெஸ்டிலும் கம்மின்ஸ் இல்லை

அஹமதாபாத், மார்ச் 07

அஹமதாபாத்தில் நடைபெற வுள்ள கடைசி டெஸ்டில் இருந்தும் அவுஸ்திரேலிய அணியின் பட் கம்மின்ஸ் விலகியுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 2-1 என முன் னிலை வகிக்கிறது இந்திய அணி. இந்தூரில் நடைபெற்ற 3ஆவது டெஸ்டை அவுஸ்திரேலியா வென் றது.

தனது தாயாருக்கு உடல்நிலை சரியில்லாததால் அவுஸ்திரேலியா திரும்பினார் அந்த அணியின் தலைவர் பட் கம்மின்ஸ். இதனால் 3ஆவது டெஸ்டில் அவர் விளை யாடவில்லை. ஸ்டீவ் ஸ்மித் அணித் தலைமைப் பொறுப்பை ஏற்று அணிக்கு வெற்றியைத் தேடித் தந்தார்.



இந்நிலையில், அவுதிரேலியாவி லிருந்து திரும்பி வர முடியாத சூழலால் 4ஆவது டெஸ்டையும் தவறவிடுகிறார் கம்மின்ஸ். இதனால் 4ஆவது டெஸ்டிலும் ஆஸி. அணியின் தலைவராக ஸ்டீவ் ஸ்மித் செயல்படவுள்ளார்.

இரு அணிகளுக்கும் இடையி லான இறுதியும் நான்காவதுமான டெஸ்ட் போட்டி நாளை மறு தினம் வியாழக்கிழமை ஆரம்ப மாகவுள்ளது. (ஐ)

# லிவர்பூல் கோல் மழை; வீழ்ந்தது மன்செஸ்டர்!

லிவர்பூல், மார்ச் 07

நடப்பு பிறீமியர் லீக் தொடரில் மன்செஸ்டர் யுனைற்றெட் அணியை 7-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியுள்ளது லிவர்பூல் அணி.

இதில், கேக்போ, நுநெஸ், சாலா ஆகியோர் தலா 2 கோல்களை பதிவு செய்தனர். பிர் மினோ ஒரு கோல் பதிவு செய்திருந்தார். ஆட்டத்தின் 43, 47, 50, 66, 75, 83, 88ஆவது நிமிடங்களில் கோல் பதிவு செய்திருந்தது லிவர்பூல் அணி.

லீக் போட்டிகளுக்கான புள்ளிப்பட்டியலில் லிவர்பூல் அணி ஐந்தாவது இடத்தில் உள்ளது. மேலும் இந்த வெற்றியின் மூலம் நடப்பு தொடரில் முதல 4 இடங்களை பிடிக்கும் வாய்ப்பை உயிர்ப்போடு அந்த அணி வைத்துள்ளது எனலாம்.

இந்தப் போட்டியின் இரண்டாவது பாதியில் 6 கோல்களை பதிவு செய்து மிரட்டி இருந்தது லிவர்பூல் அணி. அந்த அணி பதிவு செய்த கோல்களில் 2 கோல்களை பதிவு செய்த முகமது சாலா, 2 கோல்களை பதிவு செய்ய உதவி இருந்தார். அத்துடன், பிறீமியர் லீக் போட்டிகளில் லிவர்பூல் அணிக்காக 129 கோல் களை பதிவு செய்துள்ளார் சாலா. (ஐ)



# இலங்கையுடன் எல்லைத் தாண்டிய பரிவர்த்தனைகளுக்கு இந்திய ரூபா

கொழும்பு, மார்ச் 07

இந்திய ரூபாவை இலங்கையுடனான எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளுக்குப் பயன்படுத்துவது தொடர்பில் இந்திய தூதரகம் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

வங்கிகள் சுற்றுலாவுக்கான செயல்முறையை செயல்படுத்தும் கணக்குகளைத் தொடங்கிய பின்னர், வர்த்தகம் மற்றும் மூலதன பரிவர்த்தனைகளைத் தீர்ப்பதற்கான சாத்தியக்கூறுகளை முன்னெடுத்துச் செல்வதாக கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்திய மத்திய வங்கி மற்றும் இலங்கை மத்திய வங்கி 2022 இல் இந்த செயல்முறையை செயல்படுத்திய பின்னர், இலங்கை வங்கி, ஸ்டேட் பேங்க் ஒவ் இந்தியா மற்றும் இந்தியன் வங்கி ஆகியவை ஏற்கனவே இந்திய ரூபாயில் வோஸ்ட்ரோ கணக்குகளை ஆரம்பித்துள்ளன.

இந்த நிலையில் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில், மேற்கொள்ளப்படும் இந்த முன்முயற்சியின் நன்மையான தாக்கம், மற்ற துறைகளுக்கும் அதனை விரிவுப்படுத்த உதவும் என்று இந்திய தூதரகத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(அ)

# 500 மில்லியன் ரூபாய் நட்டம்!

கொழும்பு, மார்ச் 07

தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் வீதிமறியல் போராட்டங்கள் காரணமாக 500 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன இதனை தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் இன்று பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(அ)

# அமைச்சுக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு இடமளியோம்!

## திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி.



கொழும்பு, மார்ச் 07

**அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு இடமளிக்கப் போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**

நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோது, ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர், 'நாடு எதிர்கொண்டு இருக்கும் நெருக்கடிமிக்கச் சூழலில் அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது ஏற்புடைய விடயமல்ல.

அமைச்சர்களை நியமிப்பது அல்லது அவர்களை பதவியிலிருந்து நீக்குவது என்பன ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் பணியாகும்.

என்றாலும் தற்போதைய சூழலில் அதற்கு நாம் எதிர்ப்பு தெரிவிக்கின்றோம்.

அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படக்கூடாது.

10, 15 அமைச்சர்களைக் கொண்டு அமைச்சுக்களின் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

அமைச்சுக்களின் எண்ணிக்கையை அதிகரித்து அரசாங்கத்தின் நிதியை வீணடிக்க வேண்டாம்.

மக்கள் மீது மேலும் சுமைகளை திணிக்க வேண்டாம்.

அமைச்சுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்போது அதிகரிக்கப்படும் அமைச்சர்களுக்கு ஊதியத்தை வழங்குவதற்காக சீனிக்கும் ஏனைய பொருட்களுக்கும் வரியை அதிகரிக்க நேரிடும். இதன் விளைவை மக்களே எதிர்கொள்ள நேரிடும்.

மக்கள் மீது தொடர்ச்சியாக சுமைகள் சுமத்தப்படுவதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க போவதில்லை.

எனவே அமைச்சுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமாயின் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் நாம் எமது எதிர்ப்பை வெளியிடுவோம்.

மக்களுக்கும் இது தொடர்பில் அறிவுறுத்துவோம்'- என்றார்.

(அ)

# கால்நடைகளுக்கு நோய்த்தொற்று உடனடி விசாரணைகள் ஆரம்பம்

கிளிநொச்சி, மார்ச் 07

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி, கரைச்சி ஆகிய பகுதிகளில் கால் நடைகளுக்கு பரவி வரும் நோய்த்தாக்கம் தொடர்பில், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெரியம்மை வகையிலான நோய்த்தாக்கமே இவ்வாறு கால்நடைகளிடம் கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பில், கால்நடை பண்ணையாளர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில், கிளிநொச்சி மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் ஊடாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி, இயக்கச்சி, பளை, உருத்திரபுரம், நீவில் போன்ற பகுதிகளில் உள்ள பெரும்பாலான கால்நடைகளுக்கு இந்த நோய் தொற்று பரவியுள்ளது.

இந்த நோய்த்தாக்கம் காரணமாக, பால் உற்பத்திக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன், தமது வாழ்வாதாரமும் பாதிக்கப்படுவதாக பிரதேச கால்நடை பண்ணையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த விடயம் தொடர்பில், கிளிநொச்சி மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் கௌரி திலகனிடம் வினவியபோது- ஏற்கனவே நோய்த் தொற்றுக்குள்ளான கால்நடைகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், கால்நடை பண்ணையாளர்களுக்கும் இது தொடர்பான ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நோய் தொற்றினை கட்டுப்படுத்துவதில், கால்நடை பண்ணையாளர்களின் முழுமையான ஒத்துழைப்பு வேண்டும்.

நோய் தொற்று கண்டறியப்பட்டால், உடனடியாக சுகாதார கால்நடை உற்பத்தி திணைக்கள அதிகாரிகளுக்கு அறியப்படுத்தி அதனை கட்டுப்படுத்துவது தொடர்பான உரிய ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறு கால்நடை பண்ணையாளர்களுக்கு அறியப்படுத்தியுள்ளோம்.

இந்த நோய் தாக்கமானது கால்நடைகளில் இருந்து மனிதர்களுக்கு தொற்றாது என்ற போதிலும், ஏனைய கால்நடைகளிடத்தில் வெகுவாக அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.

எனவே, பாதிக்கப்பட்ட கால்நடைகளை தனிமைப்படுத்தி, அவற்றுக்கான சிகிச்சைகளை வழங்குவதன் ஊடாக நோய் தாக்கத்தினை கட்டுப்படுத்த முடியும்-என்றார்.

(அ)

# சிறைச்சாலையில் கைதி உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 07

போதைப்பொருள் குற்றச்சாட்டில் வவுனியா சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதியொருவர் உயிரிழந்துள்ளார்.


திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் குறித்த கைதி உயிரிழந்துள்ளார்.


56 வயதுடைய கருணாரத்ன பண்டார என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த கைதி உயிரிழந்தமைக்கான காரணம் கண்டறியப்பட்டாத நிலையில் பிரேத பரிசோதனைகளுக்கான சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# இலங்கையில் தேர்தலை நடத்தவேண்டும் இத்தாலியில் இலங்கையர்கள் ஆர்ப்பாட்டம்





ரோம், மார்ச் 07

இத்தாலியின் மிலானோ நகரில் இலங்கையர்கள் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஒத்திவைக்கப் பட்டமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கையர்கள் உள்ளிட்ட வெளிநாட்டவர்களும் பங்கேற்றதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

(அ)

# குத்தகை மாபியா தொடர்பில் அவதானமாக இருக்கவேண்டும்!

## குத்தகை மற்றும் கடன் தவணை செலுத்துவோர் சங்கம்

கொழும்பு, மார்ச் 07

வாகனங்களை குத்தகைக்கு பெற்றுக்கொண்டவர்கள், குத்தகை மாபியாக்கள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டியது அவசியம் என்று குத்தகை மற்றும் கடன் தவணை செலுத்துவோர் சங்கத்தின் தலைவர் அசங்க ருவன் பொதுப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர், 'குத்தகை மாபியாவே வாகனங்களை கையகப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றது.

குத்தகை மாபியாக்களிடமிருந்து வாகனங்களை பாதுகாக்க வேண்டியது அவசிமாகும். இதுவரை வாகனங்களை கையகப்படுத்தி சென்ற 68 பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.வங்கியில் கடன் கொடுத்தவர் கள் எமது பணத்தை சூறையாடு கின்றனர்.

எமது பிரச்னைகள் தொடர்பில் பேசுவதற்காக மத்திய வங்கிக்கு சென்றோம். நிதி அமைச்சுக்கு சென்றோம். எனினும் எமது எந்தப் பிரச்னைக்கும் இதுவரை தீர்வு பெற்றுக்கொடுக்கப்படவில்லை.

வாகன குத்தகையாளர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்னைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கமானது அசமந்தம் அடைந்துள்ளது.

அரசாங்கத்தின் அதிகாரிகளின் சட்டைப்பைகளுக்கு பணம் செல்வதே இதற்கு பிரதான காரணமாகும்.

குத்தகை நிறுவனங்களுக்காக பணியாற்றும் 68 அடிவருடிகளை பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சொத்துக்களை அபகரிப்பவர்கள் சங்கம் என்ற பெயரில் குறித்த கும்பல் ஒரு சங்கத்தை உருவாக்கியுள்ளது. யாரினும் சொத்துக்களை ஒருவராலும் அபகரிக்க முடியாது. எனவே சொத்துக்களை அபகரிப்பவர்கள் என்ற சங்கம் ஒன்று இருக்கக்கூடாது. அவ்வாறான கும்பலுக்கு யாரும் அதிகாரம் கொடுக்கவில்லை. எனவே கொலைகார கும்ப லுக்கு பணத்தை வழங்குவதற்கு, வாகனங்களை வழங்குவதற்கு ஒருவரும் முயற்சிக்கக்கூடாது. வாகனங்களை குத்தகைக்கு பெற்ற ஒருவரும் வாகனங்களை கையகப்படுத்த வருபவர்களுக்க வாகனங்களை கையளிக்க வேண்டாம்'-என்றார்.

(அ)

## தொழில்சங்க...

வரிக் கொள்கைக்கு எதிராக எழுந்துள்ள எதிர்க்கட்சிகள் தீர்க்கமான கட்டத்தில் இருக்கின்ற. இந்த நிலையில், இன்று செவ்வாய்க்கிழமை தொழில்சங்கள் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிமனையில் கூடி இறுதி முடிவுகளை எடுக்கவுள்ளன.

இதன்போது, எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதிக்கு பின்னர் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது தொடர்பில் இந்த சந்திப்பின் போது இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக கடந்த வெள்ளிக்கிழமை அடையாளப் பணிப்புறக்கணிப்பில் இந்த தொழில்சங்கங்கள் ஈடுபட்டிருந்தன. அத்துடன், 8ஆம் திகதி முதல் தொடர் தொழில்சங்கப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அறிவித்திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிக்குகளின்...

தேரர்கள் கடந்த மாதம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கூட்டாகக் கடிதமொன்றைக் கையளித்திருந்தனர். அக்கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை மேற்கோள்காட்டி, அவற்றுக்கு விளக்கமளித்து இந்நான்கு மகாநாயக்க தேரர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தார்.

அக்கடிதத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தத விடயங்கள் சிங்கள சமூகத்தின் மத்தியில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும், எனவே, மகா சங்கத்தினரை விமர்சிப்பது ஏற்புடையதா? என்றும் எழுப்பப்பட்டுள்ள கேள்விக்கு அளித்திருக்கும் பதிலிலேயே விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு,

எனது கருத்துக்கள் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக நான் கருதவில்லை. மாறாக அவை நேர்மறையான சூழ்நிலையொன்றையே தோற்றுவித்திருக்கின்றன. குறிப்பாக அரசியலில் பௌத்த தேரர்களின் வகிபாகத்தின் ஏற்புடைமை குறித்துப் பல சிங்கள பௌத்தர்கள் கேள்வியெழுப்ப ஆரம்பித்திருக்கின்றார்கள்.

இலங்கையில் நிலவும் இனப்பிரச்னை இன்னமும் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு அரசியல் விவகாரங்களில் பௌத்த தேரர்களால் மேற்கொள்ளப்படும் தலையீடுகளே காரணம் என்பதே எனது நிலைப்பாடாகும். வட, கிழக்குவாழ் தமிழ்மக்களின் பிரச்சினைகள் என்னவென்பதைக் கண்டறிவதற்கு ஆங்கிலம் அல்லது தமிழ்மொழி பேசக்கூடிய பௌத்த தேரர்கள் தமிழ் தலைவர்களுடன் கலந்துரையாடுவது இன்றியமையாததாகும்.

போராட்டங்களில் ஈடுபடும் தேரர்களுக்கு அதிகாரப் பரவலாக்கத்துக்கும் அதிகாரப் பகிர்வுக்கும் இடையிலான வேறுபாடும் ஒற்றையாட்சி அரசமைப்புக்கும் கூட்டாட்சி அரசியலமைப்புக்கும் இடையிலான வித்தியாசமும் தெரியவில்லை. அதுமாத்திரமன்றி அவர்களது தாய்மொழியின் வரலாறு கூட அவர்களுக்குத் தெரியாது.

இலங்கையின் இனப்பிரச்னைக்கான தீர்வில் குழப்பம் விளைவிக்கவேண்டிய தேவை அரசியல்வாதிக்கு இருக்குமாயின், அதற்குரிய உடனடி ஆதரவை பௌத்த தேரரிடமிருந்து இலகுவாகப் பெறமுடியும். "குறித்த நபர் நாட்டைப் பிளவுபடுத்த முற்படுகின்றார்" அல்லது "குறித்த நபர் விடுதலைப்புலிகள் உறுப்பினர்" அல்லது "குறித்த நபர் இந்தியாவின் கைப்பொம்மை" போன்ற விடயங்களை மாத்திரம் அவர்களிடம் கூறினால் போதுமானதாகும்.

உடனே அவர்கள் காவி உடையுடன் வீதிக்கு இறங்கிவிடுவார்கள். அவர்கள் உண்மை நிலவரத்தைப் புரிந்துகொள்ளாமல் "சீன மத்தாப்பூ" போன்று உடனடியாக வெடித்துவிடுவார்கள் - என்றார். (ஐ)

## பலமான...

வருகிறார்.

நாட்டின் செலவினங்களுக்கு நிதி ஒதுக்குவதற்கு விசேட ஒழுங்குவரிசை ஒன்றை கடைப்பிடித்தே நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது. அவ்வாறானதொரு நடவடிக்கையை பிற்பற்றி செயற்பட்டதாலே பொருளாதார நெருக்கடி நிலைமையை ஓரளவேனும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியுமாக இருக்கிறது.

நாட்டை நிர்வகிக்க ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பலம்மிக்க அரசாங்கம் ஒன்று தேவை. தொடர்ந்து இந்த நிலையில் செயல்பட முடியாது.

அதனால் இன்னும் சில மாதங்களில் அதற்கு தேவையான தேர்தலை நடத்துவார். மக்களின் ஜனநாயக உரிமைகளை ஒருபோதும் அவர் பறித்ததில்லை. ஆனால், தற்போது மக்களை வாழ வைக்கவே நடவடிக்கை எடுத்து வருகிறார். ரணில் விக்கிரமசிங்கவின் சூசகமான வேலைத்திட்டங்களால் எமது அந்நிய செலாவணி அதிகரித்து வருகிறது - என்றும் அவர் கூறினார். (ஐ)

## தயாசிறியின்...

கப்பட்டுள்ளார்.

சுதந்திர கட்சிக் குள் பிளவை ஏற்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டிலேயே தயாசிறியின் பதவி பறிக்கப்பட்டுள்ளது.

அண்மையில், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் "ஐயோ சாமி நீ எனக்கு வேண்டாம்" என்ற பாடலை தயாசிறி ஜயசேகர பாடியிருந்தார். இந்தப் பாடலை மைத்திரிபால சிறிசேனவுக்காகவே பாடினார் என்று அப்போது தகவல்கள் பரவியிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேர்தலை...

இரகசிய ஒப்பந்தங்களை மேற்கொள்ளாமல் நீதிமன்றத்தை நாடி சட்ட ரீதியான வெற்றியை பெற்றுள் ளோம். ஆனால், அரசாங்கத்தை எதிர்ப்பதாகக் கூறும் வேறு சிலர் தேர் தல் ஆணைக்குழுவின் செயல்பாடு களுக்குக் கூட எதிர்ப்பை வெளியிட வில்லை.

தேர்தலுக்காக வரவு - செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியை முடக்குவதை தவிர்க்குமாறு தெளிவான தீர்ப்பை வழங்கியுள்ளது. எனவே, பிறிதொரு சூழ்ச்சியின் மூலம் தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார் என்று எமக்கு தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்நிலையில், நீதிமன்றம் தெளிவான தீர்ப்பை வழங்கியுள்ள போதிலும், தேர்தல் ஆணைக்குழு ஏற்கனவே அறிவித்ததைப் போன்று கடந்த வெள்ளிக்கிழமை தேர்தலுக்கான தினத்தை அறிவிக்காமையானது எம்மை அதிருப்திக்கு உள்ளாக்கியுள்ளது. எனவே, தேர்தல் ஆணைக்குழு இனியும் தாமதிக்காது தேர்தல் தினத்தை அறிவிக்க வேண்டும்.

தொடர்ந்தும் கலந்துரையாடிக் கொண்டிருப்பதற்கு எதுவும் இல்லை. அரசமைப்பில் குறிப்பிடப்பட்டமைக்கு அமைய பொலிஸ் திணைக்களம், நிதி அமைச்சு, அரச அச்சகம் என்பவற்றுக்கு பணிப்புரையை மாத்திரமே விடுக்க வேண்டியுள்ளது. எனவே அதற்கான நடவடிக்கைகளை தேர்தல் ஆணைக்குழு விரைந்து எடுக்க வேண்டும்.

எல்லை நிர்ணய குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தேர்தலை மேலும் ஒரு வருட காலத்துக்கு காலம் தாழ்த்துவதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அடுத்த திட்டமாகும். அவருக்கு வாக்கு வங்கி குறைவடைந்தமைக்கு எம்மால் என்ன செய்ய முடியும்? இவ்வாறு ஏதேனும் சூழ்ச்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டால் நாம் மீண்டும் மக்களுடன் வீதிக்கு இறங்குவோம் - என்றார். (ஐ)

## ஐ.நா....

உலக மனித உரிமைகள் தொடர்பில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் மீளாய்வு கூட்டம் ஜெனிவாவில் நடக்கிறது. இதிலேயே, இலங்கையின் ஐ. நா. நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ஹிமாலி அருணதிலக தீர்மானத்தை இலங்கை ஏற்கவில்லை என்ற தகவலை தெரிவித்துள்ளார்.

அவர், "மனித உரிமைகள் பேரவையால் பல பயனற்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சமீபத்திய 51/1 தீர்மானமும் அதிலொன்று. சம்பந்தப்பட்ட நாடு என்ற வகையில் எமது சம்மதம் இல்லாமல் அது நிறைவேற்றப்பட்டது என்று கடந்த ஒக்ரோபரில் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இலங்கையின் நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறேன். 46/1 தீர்மானத்தின் அதன் சொந்த விளக்கத்துக்கு இணங்க மனித உரிமைகள் பேரவையால் நிறுவப்பட்ட இலங்கை மீதான வெளிப்புற ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையை விரிவுபடுத்தும் மற்றும் வலுப்படுத்தும் இந்த தீர்மானத்தை நாங்கள் நிராகரிக்கிறோம்", என்று கூறினார்.

மேலும், "இந்த தீர்மானங்கள் எனது நாட்டு மக்களுக்கு உதவாது. இலங்கை சமூகத்தை பிளவுபடுத்தும். இலங்கையில் நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கத்துக்கு உதவாது. நாட்டின் குறிப்பிட்ட தீர்மானங்களுக்கு எங்கள் எதிர்ப்பு இருந்தபோதிலும், இந்தப் பேரவை முன்னர் விளக்கப்பட்டபடி பேரவையின் சிறப்பு நடைமுறைகள் மற்றும் ஒப்பந்த அமைப்புகளுடன் விவாதிக்க நாங்கள் திறந்திருக்கிறோம்", என்றும் கூறினார். (ஐ)

## தமிழ்...

தேர்தலுக்கான நிதியை உடனடி யாக விடுவித்தாலும், தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 5 முதல் 7 வாரங்களுக்குள் தேர்தலை நடத்த வேண்டும். எனவே, 2023 ஏப்ரல் இரண்டாம் பாதியில் தேர்தல் நடத் தப்படவேண்டும்.

திறைசேரி செயலாளர் மகிந்த சிறிவர்த்தன தேர்தலை நடத்துவதற்கு போதிய நிதியை வழங்குவதாக உறுதியளித்தால், நாளை (இன்று) காலை தேர்தல் ஆணைக்குழுவில் நடைபெறவுள்ள கூட்டத்தில், தேர்தலுக்கான குறுகிய திகதியை அறிவிக்க தேர்தல் ஆணைக்குழு தயாராக இருப்பதாக புஞ்சிஹேவா தெரிவித்தார்.

"தேர்தல் ஆணைக்குழுவால் உள்ளூராட்சி தேர்தலை நடத்த முடியுமா இல்லையா என என்னால் உத்தரவாதம் அளிக்க முடியாது. தேர்தல் ஆணைக்குழுவுக்கு போதுமான நிதி கிடைப்பதை பொறுத்தது. நாளைய (இன்றைய) கலந்துரையாடலில் போதிய நிதியை வெளியிடுவதற்கு திறைசேரி பொறுப்பேற்றால், உள்ளூராட்சி தேர்தலை அருகில் உள்ள நாளில் நடத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். பந்து திறைசேரியின் கைகளில் உள்ளது.

"இருப்பினும், தேர்தலுக்கு நிதியை விடுவிப்பதில் தாமும் ஆர்வமாக இருப்பதாகவும், ஆனால், தற்போது அவ்வாறு செய்வதற்கு போதுமான பணம் இல்லையென திறைசேரி கூறலாம். அவர்களால் சில மாதங்களில் மட்டுமே நிதியை விடுவிக்க முடியும் என கூறலாம். ஆனால், விவாதத்தில் இந்த மாதிரியான சூழல் உருவாகும் என்று நான் நினைக்கவில்லை" என்று அவர் மேலும் கூறினார்.

திறைசேரி அதிகாரபூர்வமாகவும் சட்டப்பூர்வமாகவும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதியை விடுவிக்கக் கடமைப்பட்டுள்ளது. இல்லை என்றால் அது நீதிமன்ற அவமதிப்பாகும். தேர்தல் ஆணைக்குழு மற்றொரு சட்டப் போராட்டத்தில் ஈடுபட விரும்பவில்லை.

திறைசேரி உடனடியாக நிதியை விடுவிப்பதாக உறுதியளித்தால், தேர்தல் நடைபெறும் நாளைக் குறிக்கும் வர்த்தமானி அறிவிப்பை 25 மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மூலம் நாளை புதன்கிழமை அல்லது வியாழக்கிழமை வெளியிட தேர்தல் ஆணைக்குழு முடிவு செய்யும் - என்றார். (ஐ)

# ஒன்றுகூடல்

ஒன்ராறியோ, மார்ச் 07

காங்கேசன்துறை நடேஸ்வர கல்லூரி பழைய மாணவர் (கனடா) சங்கத்தின் ஒன்றுகூடல் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஜூலியஸ் நிகழ்வு நிலையத்தில் (2201 Finch Ave W, North York, ON M9M 2Y9) நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கனடாவில் வசிக்கும் நடேஸ்வர கல்லூரியின் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், அனைவரையும் ஒன்றுகூடுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## எரிபொருட்களின்...

எரிபொருள் விலைகள் குறைவடைந்தால் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைவடையும். எரிவாயு விலைகளும் குறைவடையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## வடக்கு...

அரசுடன் போடப்பட்ட ஒப்பந்தம் நிறைவேற்றப்படுமா? என்று கேள்வி எழுந்தது. ஆனால், இலங்கையில் நடைபெறும் வளர்ச்சி பணிகளில் பாதிப்பு ஏற்படாது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனாவின் கப்பல் நிறுத்தப்பட்டமைக்கு இந்தியா இலங்கைக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இதுபோன்ற சர்ச்சை மீண்டும் ஏற்படாது என்று இந்தியாவுக்கு இலங்கை உறுதியளித்துள்ளதா என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்,

இது ஒரு சிக்கலான உறவு. இலங்கை இந்தியாவின் நெருக்கிய நண்பன். பாதுகாப்பு கவலைகள் குறித்து இந்தியாவின் நியாயமான உணர்வுகளை புண்படுத்தும் எதையும் செய்ய விரும்பவில்லை. ஆனால், இதனிடையே நாம் எல்லோருடனும் இணைந்து செயல்பட வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். எல்லா பிரச்னைகள் இருக்கின்ற போதிலும் சீனா இந்தியாவின் மிகப் பெரிய (வர்த்தக) பங்காளியாகவும் இருக்கிறது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

## 40 வீதத்தால்...

மேலும், 24 மணித்தியாலமும் மின்சா ரத்தை விநியோ கிக்க மின்சாரத் துறை அமைச்சு விசேட நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. மின் உற்பத்திக்கான செலவை முகாமைத்துவம் செய்வதற்காவே மின்கட்டணம் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது.

மின்சாரசபையின் நட்டத்தை ஈடு செய்வதற்காக மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது என குறிப்பிடுவது அடிப்படையற்றது. நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மின்சார சபையை மறுசீரமைக்க நியமிக்கப்பட்ட நிபுணத்துவ குழு அறிக்கை அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மறுசீரமைப்பு அறிக்கையை எதிர்வரும் மாதம் முதல் வாரம் அமைச்சரவையில் சமர்ப்பித்து அதனை தொடர்ந்து பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு 14 ஆயிரமாக காணப்பட்ட மின்சார சபை சேவையாளர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு 22400 ஆக அதிகரித்துள்ளது. மறுசீரமைப்பு அறிக்கையில் ஊழியர் குறைப்பு தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய மின்சார சபையின் ஊழியர்களின் எண்ணிக்கையை 40 சதவீதத்தால் குறைக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

மின்சார உற்பத்தி, விநியோகம், மற்றும் இதர சேவை நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களை ஒருமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. மின்சார சபையின் செலவுகளை மட்டுப்படுத்தும் போது ஒரு முன்னேற்றகரமான தீர்மானத்தை எடுக்க முடியும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# தேர்தலை ஒத்திவைக்க அரசுக்கு கால அவகாசம் வழங்கக்கூடாது!

## கோருகின்றார் ரில்வின் சில்வா



கொழும்பு, மார்ச் 07

**தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசாங்கத்துக்கு கால அவகாசம் வழங்கும் வகையில் தேர்தலுக்கான திகதியை நிர்ணயிக்கவேண்டாம் என்றே தேர்தல் ஆணைக்குழுவிடம் கோருவதாக மக்கள் விடுதலை முன்னிணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஓரளவான வாக்குச்சீட்டுகள் அச்சிடப்பட்டுள்ளதாக அரச அச்சக திணைக்களத்தின் ஆணையாளரும் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலை நடத்துவதற்கு போதிய நிதியில்லை என்றே பொதுவாக கூறப்படுகின்றது.

நாட்டில் போதிய நிதி இல்லாத சூழலில் இருக்கும் நிதியை விணடிப்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபடாது நிதியை மீதப்படுத்தும் வகையிலேயே அரசாங்கம் செயற்பட வேண்டும்.

தற்போது தேர்தலை நடத்துவதற்கான காலத்தை பிற்போட பிற்போட அதற்கான செலவீனமும் அதிகரித்துக் கொண்டே செல்லும்.

தேர்தலை நடத்துவதற்கு நீண்டகாலம் எடுக்குமாயின் தேர்தல் ஆணைக்குழு, அரச அச்சகம் என்பவை அதிகளவான நிதியை செலவிடும்.

எனவே தேர்தலுக்கான செலவீனத்தை குறைத்துக் கொள்வதற்கு சிறந்த வழியாக உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும்.

தேர்தலை பிற்போடும்போது அரசியல் கட்சிகளுக்கான செலவீனமும் அதிகரித்து செல்லும்.

எனவே செலவீனங்களை குறைத்துக்கொள்ள வேண்டுமாயின் தேர்தலுக்கான திகதியை முன்கூட்டியே அறிவிக்க வேண்டியது அவசியமாகும் - என்றார். (அ)

# திறைசேரி உத்தரவாதமளித்தால் இரண்டு நாட்களில் வர்த்தமானி

கொழும்பு, மார்ச் 07

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு திறைசேரியினால் தேவையான உத்தரவாதம் இன்று செவ்வாய்க்கிழமை வழங்கப்படுமாயின், தேர்தலை நடத்துவதற்கான திகதி புதன் அல்லது வியாழன் அன்று வர்த்தமானியில் வெளியிடப்படும் என அறிய முடிகின்றது.

தேர்தல்கள் ஆணைக்குழு நாளை காலை தேர்தல் நாள் குறித்து முடிவு செய்வதற்காக திறைசேரிச் செயலாளர், அரசாங்க அச்சக அதிகாரி மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரை சந்திக்க உள்ளது.

திறைசேரியினால் தேவையான உத்தரவாதம் வழங்கப்பட்டால் வர்த்தமானி வெளியிடப்பட்டு பின்னர் தேர்தல் வர்த்தமானி அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகளால் வெளியிடப்படும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மார்ச் 9ஆம் திகதி நடைபெறும் என முதலில் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தபோதிலும், நிதி உள்ளிட்ட பிரச்னைகளினால் தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறாது என அறிவிக்கப்பட்டது. (அ)

# 8 வீத வாக்குகளையே ஆளும் தரப்பு பெறும்!

## பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 07

உள்ளூராட்சிமன்ற தேர்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப ஆய் வில், அரசாங்கத்துக்கு 10 சதவீதமான ஆதரவே கிடைக்கப்பெற்றுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர்,

"இறுதித் தேர்தலின் முடிவில் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இரு கட்சிகளும் சுமார் 8 சதவீத வாக்குகளையே பெறும்.

உள்ளூராட்சிமன்ற தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய வரலாற்று ரீதியிலான தீர்ப்பினூடாக ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான தீர்ப்பை வழங்கியதற்காக உயர்நீதிமன்றத்துக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதனூடாக அரசாங்கம் விரும்பியோ அல்லது விரும்பாமலோ தேர்தலை சந்திக்க நேரிடும்.

உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட இடையூறுகள் அனைத்தும் உயர் நீதிமன்றத்தின் தலையீட்டுடன் இல்லாமல் செய்யப்பட்டமை தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைத்த பாரிய ஒத்துழைப்பாகவே அமைந்துள்ளது.

வேட்புமனு தாக்கல் செய்த 3,500 அரசு அதிகாரிகளுக்கு ஏற்பட்டுள்ள பாரபட்சம் குறித்து தேர்தல் ஆணைக்குழு தலையிட வேண்டும்.

அதேபோன்று தேர்தல் ஆணைக்குழு கூடிய விரைவில் தேர்தலை நடத்துவதற்கான திகதியை அறிவிக்க வேண்டும். தேர்தலை நடத்துவதற்கு பொலிஸ் மா அதிபர், திறைச்சேரியின் செயலாளர், நிதி அமைச்சின் செயலாளர் ஆகியோர் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினூடாக நிதி அமைச்சின் செயலாளருக்கு சுயாதீனமாக செயற்படக்கூடிய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் அதனை அவர் மறந்துவிட்டு செயற்பட்டால் அது பாரிய அநீதியாகும்" - என்றார். (அ)

# மின்சாரம் தாக்கி மாணவன் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 07

தெல்லிப்பழை - கட்டுவன்புலம் பகுதியில் மின்சாரம் தாக்கி மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் தெல்லிப்பழை பகுதிச் சேர்ந்த எஸ்.மாதுசன் (வயது-18) என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுவன்புலம் பகுதியில் வேப்ப மரத்தின் கொப்புகளை வெட்டும்போது மரக்கொப்பு பிரதான அதிஉயர் மின்கம்பியில் விழுந்ததன் மூலம் மின்சாரம் தாக்கி குறித்த மாணவன் உயிரிழந்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை தெல்லிப்பழை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# பாணின் விலை 100 ரூபா?

கொழும்பு, மார்ச் 07

பாண் உள்ளிட்ட பேக்கரி உணவுப் பொருட்களின் விலை குறைக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஜயவர்தன தெரிவித்தார்.

பேக்கரி பொருட்களின் விலையை குறைத்தால் மட்டுமே தற்போது முடங்கியுள்ள பேக்கரி தொழிலை மீட்டெடுக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

தற்போது பாண் ஒன்றின் விலை 150, 160, 170 எனவும் சில பிரதேசங்களில் 180 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதால் விற்பனை 100 வீதம் குறைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மின் கட்டண உயர்வால், பேக்கரி தொழிலில் பெரும் பாதிப்பு ஏற்பட்டு, பேக்கரி தொழில் நலிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது என ஜயவர்தன குறிப்பிட்டார்.

ஆகவே குறைந்தபட்சம் பாணின் விலை 100 ரூபாயாக குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அகில இலங்கை பேக்கரி சங்கத்தின் தலைவர் ஜயவர்தன கூறினார். (அ)

# யுவதியை காணவில்லை

கொழும்பு, மார்ச் 07

மாவனெல்லை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லேவுக்கே உஸ்ஸப்பிட்டிய பிரதேசத்தில், யுவதி ஒருவரை கடந்த ஜனவரி மாதம் 18ஆம் திகதி முதல் காணவில்லை என்று மாவனெல்லை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தை சேர்ந்த 28 வயதுடைய சஜித்ரா கீதாஞ்சலி என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

குறித்த யுவதி தொடர்பில் இதுவரை எவ்வித் தகவல்களும் இல்லை என்று தெரிய வந்துள்ளது.

யுவதியைக் கண்டறிவதற்கு மாவனெல்லை பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

காணாமல் போன யுவதியின் புகைப்படத்தையும் பொலிஸ் தலைமையகம் நேற்று வெளியிட்டுள்ளது.

குறித்த யுவதி தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் 035-2247222, 071-8591418 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தகவல் தருமாறு பொலிஸார் கோரியுள்ளனர். (அ)

# தேர்தல் ஆணைக்குழுவில் இன்று முக்கிய கூட்டம்

கொழும்பு, மார்ச் 07

உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான திகதியை நிர்ணயிப்பது, அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவில் இன்றைய தினம் முக்கிய கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் நிதி அமைச்சின் செயலாளர், அரச அச்சக திணைக்களத்தின் ஆணையாளர், பொலிஸ்மா அதிபர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை முடக்கும் செயற்பாட்டுக்கு உயர்நீதிமன்றம் இடைக்காலத்தடை விதித்துள்ளது.

நிதி அமைச்சின் செயலாளர், நிதி அமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருக்கு இந்த இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையிலேயே உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்துவதற்கான புதிய திகதியை தீர்மானிப்பதற்கான கலந்துரையாடல் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவில் இன்று இடம்பெறவுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.